விலை ரூபா: 20.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 11 திங்கட்கிழமை (23.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 126

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# ஹிலாரி-பீரிஸ் சந்திப்பின் போது


# அரசின் நிகழ்ச்சி நிரல் கையளிப்பு!

## இன்று கட்சிகளின் நிலைப்பாடு சமர்ப்பிப்பு



(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டனை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அடுத்த மாதம் சந்தித்து பேசும்போது நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான நிகழ்ச்சி நிரல் கையளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுதொடர்பில் அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் நிலைப்பாடு இன்று சமர்ப்பிக்கப் படவுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)



## இந்தியத் தூதரக விருந்தில் பிரபாகரன் குறித்து பேச்சு!

### ஆங்கில வார இதழ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட இந்திய நாடாளுமன்றக் குழுவுக்கு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் ஏற்பாடு செய்த இராப்போசன விருந்தில் பங்கேற்ற பசில் ராஜபக்ஷ, இரா.சம்பந்தன், ரங்கராஜன் ஆகியோர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் குறித்து கலந்துரையாடியதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த இராப்போசன விருந்தில் மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ரி.கே.ரங்கராஜன், ஒரு கதை சொல்லப் போவதாக தொடங்கினர். எனது மகனுக்கு 12 வயதாக இருக்கும் போது, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஒளிப்படத்தை அவர் தனது நூலகத்தில் வைத்திருந்தான்.

எதற்காக இந்தப் படத்தை வைத்திருக்கிறாய் என்று கேட்ட போது அதற்கு அவர் தான் தமிழ் மக்களின் தலைவர் என்று எனது மகன் பதிலளித்தான். சில காலங்களுக்குப் பின்னர் அந்தப் படத்தைக் காணவில்லை.

அதற்கு என்ன நடந்தது என்று மகனிடம் கேட்ட போது, அவர் ஒரு கதாநாயகன் அல்ல என்று புரிந்து கொண்டதால்தான் அதை அகற்றி விட்டதாக மகன் கூறினான்.

அவனது அந்தமுடிவுக்கு அமிர்தலிங்கத்தைப் புலிகள் சுட்டதே காரணம் என்று பின்னர் அறிந்து கொண்டேன் என்று ரங்கராஜன் கூறினார்.

அந்த கதையை ரங்கராஜன் கூறி முடித்த போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தொடங்கினார். போர் முடிபடைய முன்னதாக பிரபாகரனைச் சந்தித்த போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய இரண்டு (20ஆம் பக்கம் பார்க்க)

## தம்புள்ளையிலுள்ள பள்ளிவாசல் அகற்றுமாறு பிரதமர் உத்தரவு

(தம்புள்ளை)

தம்புள்ளைப் பிரதேசம் புனிதப் பிரதேசமானதால், அங்கு அமைந்துள்ள சர்ச்சைக்குரிய பள்ளிவாசலை அகற்றுமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

இவ் உத்தரவை புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சரும் பிரதமருமான டி.எம்.ஜயரத்ன நேற்று ஞாயிற்றுக்கிழமை உத்தர விட்டுள்ளார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ரங்கிரி தம்புள்ளை விகாரை புனித பிரதேசத்தில் இப் பள்ளிவாசல் அமைந்துள்ளமையினால் இப் பள்ளிவாசலை உடனடியாக அகற்றுமாறும் பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

அகற்றப்படும் பள்ளிவாசலுக்கு பதிலாக வேறு பொருத்தமான இடத்தில் இஸ்லாமியர்கள் சமய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான உதவிகளை வழங்குமாறு அதிகாரிகளை பிரதமர் அறிவுறுத்தியதாக பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பளையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலொன்றையடுத்து பிரதமர் இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இஸ்லாமிய (20ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று மணி நேரத்தில் எட்டு விபத்துக்கள் பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று 3 மணியிலிருந்து 6 மணிக்குள் மட்டும் எட்டு விபத்துச்சம்பவங்களில் காயமடைந்த 12 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவற்றில் 5 விபத்துச் சம்பவங்கள் மதுவின் மயக்கத்தினாலும் ஏனைய மூன்றும் கவனயீனத்தினாலும் இடம் பெற்றுள்ளன.

முளவை, ஊர்காவற்றுறை, கஸ்தூரியார் வீதி, குருநகர், ஐந்து சந்தி ஆகிய இடங்களிலும், வெலிங் (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் பகுதிகளில் தொடர்ந்தும் இராணுவம் இருக்க நினைக்கவில்லை!

### இருவருடங்களில் 11ஆயிரம் பேர் குறைப்பு என்கிறார் யாழ்.தளபதி

(யாழ்ப்பாணம்)

தமிழர்பகுதிகளில்தொடர்ந்துநிலை கொண்டிருக்க வேண்டும் என்று இராணுவத்தினர் நினைக்கவில்லை.

யாழ்.மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 27 ஆயிரம் இராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் தற்போது 16 ஆயிரம் இராணுவ வீரர்கள் தான் கடமையில் உள்ளனர் என யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைப் பிரிவின் ஒத்துழைப்புடன் கட்டுவன் ஏழாலையில் வசிக்கும் 20 வயதுடைய கிருஸ்ணகுமார் கஜேந்தினி என்ற பெண்ணுக்கு ஏற்பட்ட இருதய நோயை (20ஆம் பக்கம் பார்க்க)



## ஊடகவியலாளர் மாநாட்டை குழப்பிய போர்க்குற்ற கேள்வி

### மௌனம் சாதித்தனர் காங்கிரஸ் எம்.பிக்கள்

(சென்னை)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்ற விசாரணைகள் தொடர்பில் ஜனாதிபதி மகிந்தவிடம் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு வலியுறுத்தியதா என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு இக் குழுவில் இடம்பெற்றிருந்த தமிழ்நாடு காங்கிரஸ் உறுப்பினர்கள் பதிலளிக்கவில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு 6 நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்று முன்தினம் முற்பகல் நாடு திரும்பியிருந்தது. இதனையடுத்து இக் குழுவில் இடம் பெற்றிருந்த தமிழ்நாடு காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்று மாலை சென்னை சத்தியமூர்த்தி பவனில் ஊடகவியலாளர்கள் மாநாடு ஒன்றை நடத்தியிருந்தனர்.

இதன்போது, இலங்கையில் இடம்பெற்ற போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான புனர்வாழ்வு நடவடிக் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஹயஸ் மோதிய சிறுமி நேற்று உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஹயஸ் வானினால் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்ப்ட்டிருந்த சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உரும்பிராய் கிருஸ்ணர் கோயிலைச் சேர்ந்த துரைராஜா சுதர்நிலா(வயது 04) என்ற சிறுமியே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த சிறுமியின் வீட்டிற்கு முன்னால் இடம்பெற்றது.

குறித்த சிறுமி தனது வீட்டில் இருந்து எதிர்வீட்டிற்குச் செல்ல முயற்சிக்கையிலேயே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தலையிலும் காலிலும் நெஞ்சுப் பகுதியிலும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறுமி நேற்றுமுன்தினம் வரை தனது தாயுடன் உரையாடியவண்ணமே இருந்துள்ளார்.

எனினும் நேற்றுக்"காலை குறித்த சிறுமி உயிரிழந்துள்ளார். சிறுமியை மோதிய ஹயஸ் வான் சாரதி உட்பட மூவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-4)

## கேரளாவிலிருந்து போதைப் பொருள்

கேரளாவில் இருந்து யாழ்.மாவட்டத்திற்கு போதைப் பொருட்கள் கடத்தப்பட்டு வருகின்றது என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த பொலிஸார் உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

போதைப் பொருட்களான கஞ்சா, ஹெரோயின்; அபின் போன்றவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் பலரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியபோது அவை இந்தியாவின் கேரளாவில் இருந்து கடல் வழியாக யாழ்.மாவட்டத்திற்கு கொண்டு வரப்பட்டது தெரியவந்துள்ளது.

போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கின்ற போதும் பொதுமக்களின் ஒத்துழைப்பு போதுமானதாக இல்லை.அத்தோடு இவ்வாறான குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்படுபவர்கள் பிணையில் விடுவிக்கப்படுவதனால் தொடர்ந்து குற்றச்செயல்கள் இடம்பெற்று வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## சாவ.நகரசபைத் தலைவரின் வீட்டின் மீது தாக்குதல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபைத் தலைவர் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சாவகச்சேரி நகர சபைத் தலைவராக பணியாற்றிவரும் தேவசகாயம்பிள்ளை என்பவரின் வீட்டின் மீதே நான்கு மோட்டார் சைக்கிளில் சென்ற குழுவொன்று நேற்றுமுன்தினம் நள்ளிரவு இத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிள் ஒன்று தீ வைத்து கொளுத்தப்பட்டுள்ளதுடன், வீட்டின் கதவு மற்றும் ஜன்னல் ஆகியனவும் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் சத்தம் கேட்டு சாவகச்சேரி நகரசபைத் தலைவரும், அவரது குடும்பத்தினரும் வெளியே சென்று பார்ப்பதற்குள் இத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி நகர சபைத் தலைவரும் உறுப்பினர்களும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர். (எ-8)

## நள்ளிரவில் வீடு புகுந்து வாகனம் மீது தாக்குதல்

(பூந்தோட்டம்)

வவுனியா உக்கிளாங்குளம் பகுதியில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் இரவு புகுந்த இனந்தெரியாதோர் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தஅரச சார்பற்ற நிறுவனத்திற்கு சொந்தமான வாகனத்தை சேதப்படுத்தியதுடன், தீயும் வைத்துள்ளனர்.

மிதிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள எப்.எஸ்.டி நிறுவனத்தின் உயரதிகாரி ஒருவருடைய வீட்டிற்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் வந்து நின்று அவ்வதிகாரியை அழைத்த போதும் அவர் வெளியே வராத காரணத்தால் வீட்டின் வாயிற் கதவினூடாக உட்சென்று அவருக்கு மேற்படி நிறுவனத்தால் வழங்கப்பட்டிருந்த வாகனத்தைக் கூரிய ஆயுதங்களால் சேதப்படுத்தியதுடன்,

அவ்வாகனத்திற்கும் தீ வைத்துள்ளனர். இதன் காரணமாக வாகனம் பாரிய சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்றுக் காலை சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (எ-9,266)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

திருமதி செ. சிவானந்தராஜா அவர்களின் அன்பு மாமி

**திருமதி சுந்தரம் கந்தையா**

அவர்கள் 20.04.2012 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நலன்புரி மன்றம்
யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

(8221)


## இறுப்பிட்டியில் 'சித்திரைத் திருவிழா' விளையாட்டு நிகழ்வு 25 இல் ஆரம்பம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு 4, இறுப்பிட்டி சனசமூக நிலையமும் இறுப்பிட்டி விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் சித்திரைத் திருவிழா விளையாட்டு நிகழ்வுகள் நாளை மறுதினம் 25-ம் திகதி தொடக்கம் வரும் 29-ம் திகதிவரை நடைபெறும்.

இதில் 25,26-ம் திகதிகளில் புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக்கழக மைதானத் தில் உதைபந்தாட்டப் போட்டிகளும் 27 மற்றும் 28-ம் திகதிகளில் இறுப்பிட்டி சனசமூக நிலைய மைதானத்தில் கரப்பந்தாட்டப் போட்டிகளும் (செற்றப் ,ஓவர்) நடைபெறும்.

இப் போட்டிகளில் தீவுப் பகுதி விளையாட்டுக் கழகங்கள் மட்டும் கலந்து கொள்ள முடியும்.

கலந்து கொள்ளும் அணிகள் போட்டி நடைபெறும் தினத்தன்று சமுகமளிக்க வேண்டும்.முற்பதிவுகள் எவையும் இடம்பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

29-ம் திகதி யன்று சிறுவர் நிகழ்வு, பார்வையாளர் நிகழ்வுடன் இரவு 7 மணிக்கு பரிசளிப்பு நிகழ்வுகள் இடம்பெறும். (ச)


## சிறி நதியாவின் அட்ஷய திருதியை அழைப்பு

உலகின் வரட்சியை நீக்கி நல்ல விளைச்சலையும் ஐஸ்வர்யத்தையும் தருவதற்காக புனித கங்கை நதியானது சிவபெருமானின் ஆணைப்படி பூமிக்கு வந்து பசுமையையும், ஐஸ்வர்யத்தையும் உண்டாக்கிய நாள் மற்றும் வேதவியாசகர் விநாயகப் பெருமானுடன் சேர்ந்து மகாபாரதத்தை எழுத ஆரம்பித்த தினமும் அன்றே மற்றும் கிருஷ்ணபிரான் பாண்டவர்களுக்கு என்றுமே அள்ள அள்ளக் குறையாத அட்ஷய பாத்திரத்தினை வழங்கிய நாளும் அன்றைய தினமே இதுவே அட்ஷய திருதியை நாள் என்று அழைக்கப்படுகின்றது. இந்நாளில் செல்வம் ஐஸ்வர்யம் என்பவற்றின் உன்னத குறியீடான தங்கத்தினை அன்றைய தினம் வாங்கி அணிபவர்களுடைய செல்வம் ஐஸ்வர்யம் அதிகரித்துக் கொண்டே செல்லும் என்பதே அனைவரினதும் நம்பிக்கை.

இவ் அட்ஷய திருதியை நன்நாளில் அனைவரும் அட்ஷய வாழ்வு பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம் : 24.04.2012

இடம் : சிறி நதியா நகைமாளிகை

நேரம் : மு.ப. 7.00 - பி.ப. 9.00 மணிவரை



"தரம் குன்றா தங்கத்தினை சிறி நதியாவில் பெற்று என்றுமே குறைவில்லா செல்வ வாழ்வு வாழ்ந்திடுவீர்கள்."



குறிப்பு : ★ இன்றே உங்கள் தெரிவுகளை ஓடர் செய்து நாளைய தினமும் பெற்றிடலாம்.

★ நாளைய தினம் எமது நிறுவனத்தில் தங்கம் வாங்கும் அனைவருக்கும் அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்படும் என அன்பான வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**சிறி நதியா நகைமாளிகை,**
**இல. 01, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.பே. 021 222 2709**

**சிறி நதியா நகைமாளிகை,**
**இல. 56, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.பே. 021 222 6744**

(C-6429)

## இன்று ஒரு தகவல்

### அளவும் அனுசரிப்பும்

ஒரு ஊரிலே ஒருவன் இருந்தான். அவனது தொழில் உடைகள் தைப்பதாகும்.

அவன் தனக்கென ஒரு சொந்தமான தையல் கடை வைத்திருந்தான்.

ஒருநாள் அவனிடம் ஒருவன் வந்து ஒரு சட்டைத் துணியைக் கொடுத்து தைக்கும் படியாக சொன்னான்

" வருகிற சனிக்கிழமை வா.... வந்து வாங்கிக்கொண்டு போ!" என்று அவன் சொன்னான்.

அதே மாதிரி இவன் வந்தான் அவனும் தான் தைத்து வைத்திருந்த சட்டையைக் கொடுத்தான். இவன் அதை வாங்கி அங்கே அளவு பார்த்தான்.

கை நீளம் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்தது. வலதுகை இடது பக்கத்தை விட நீளம் குறைவாக இருந்தது.

அவன் முணுமுணுக்க ஆரம்பித்தான். "என்ன இது.... இப்படி பிழையாக தைத்திருக்கிறாய்!" என்றான்.

அதற்கு அவன் "அய்யய்யோ.... இதற்காகவா சங்கடப் படுகிறாய்? வலது கையை சீர்செய்தால் சரிவரும் அந்தச் சட்டையிலே உள்ள கலையம்சத்தை கவனியுங்கள். எவ்வளவு அழகாக தைத்துள்ளேன் பார்..... ஒரு சிறிய குறையை பொருட்படுத்த வேண்டாம். நான் கூறிய மாதிரி கையை சற்று உள்ளே இழுத்து வைத்துக் கொண்டு நடந்து போனால் சரியாக இருக்கும் என்றான்.

அவனும் யோசித்துப் பார்த்தான். சரியாகத்தான் இருந்தது. சற்று வலது கையை உள்ளே இழுத்து.... சட்டை சரியாக இருக்கிற மாதிரி செய்தான்.

இப்போது மறுபடி வேறு பிரச்சினை. வலது கையை உள்ளே இழுத்தமாதிரி வைத்துக் கொண்டதும் முதுகு பக்கம் சற்று துணி தளர்ச்சியாக தொங்கிற மாதிரி இருந்தது.

" என்ன இது! முதுகுப்பக்கம் துணி குவிந்து விட்டதே! என்றான். அவன் மறுபடியும் முணுமுணுக்க ஆரம்பித்தான்.

உடம்பை அதற்கு தகுந்த வாறு வளைத்துக் கொண்டால் சரியாகப் போய் விடும். இதற்காக அந்த அழகான தையலைப் பிரித்து அதிலே உள்ள கலையம்சத்தை கெடுக்க என் மனம் இடம் தரவில்லை. எவ்வளவு தளர்த்தியாக இருக்கிறதோ அவ்வளவுக்கு சற்று உடம்மை வளைத்துக் கொடுத்தால் போதும்" என்றான்.

அதுவும் நல்ல யோசனையாகப் தெரிந்தது. இவனுக்கு.... சரியென்று கூறிவிட்டு புறப்பட்டான். தெருவிலே இறங்கினான். கையை சற்று உள்ளே இழுத்தான். உடம்மை சற்று வளைத்தான். சட்டைக்கு ஏற்றாற்போல் செய்தான். மெதுவாக நடக்க ஆரம்பித்தான்.

இப்போது எதிரிலே ஒருவன் வந்தான். இவனை உற்றுப் பார்த்தான். இவன் அணிந்திருக்கும் சட்டையை பார்த்தான். ஆகா! அற்புதம்! என்றான்.

"சும்மாச் செல்லக் கூடாது.... மிகவும் நன்றாக உள்ளது. நிச்சயமாக இது... இந்த ஊரிலே ஒருவன் இருக்கிறான். அவன் தைத்ததாகத்தான் இருக்கும்" என்றான்.

இதைக் கேட்டதும் அவனுக்கு ஆச்சரியம். " எப்படி அவ்வளவு சரியாக சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டான்.

இதற்கு அந்த வழிப்போக்கன் சொன்னான் "அவன் மிகவும் கெட்டிக்காரன்... உங்களை மாதிரி உடம்பும் கையும் வளைந்து போன ஒருவனுக்கு அவனைத் தவிர வேறு யாராலேயும் இவ்வளவு பொருத்தமாக சட்டையைத் தைக்க முடியாது" என்றான்.

சற்று யோசித்துப்பாருங்கள் அவனுக்காக இவன் அனுசரிக்கப் போய் இவனுடைய நிலைமை எப்படியானது?

இதே மாதிரிதான் சில சடங்குகளும் சம்பிரதாயங்களும் எம்மைக் கோமாளியாக மாற்றி விடும்.

எதுவாகயிருந்தாலும் எதிலும் அறிவு பூர்வமான அனுகு முறை அவசியம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## கண்டாவளை பிரதேசத்திற்கு மின்சாரம் கிடைப்பது எப்போது?

(புளியம்பொக்கணை)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளைப் பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்கப்படாமையால் அக்கிராமம் இருளில் மூழ்கியுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட இம்மக்கள் போரினால் அனைத்தையும் இழந்து வாழ்வாதாரத்தில் பின்னடைவுள்ளவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

கண்டாவளைப் பிரதேச செயலகம் உள்ளிட்ட பகுதிகளுக்கு மின்சாரம் வழ ங்கப்படாமையினால் பிரதேச மக் களின் நாளாந்த செயற்பாடுகள் மற்றும் கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் நாளாந்த செயற்பா டுகள் என்பன ஸ்தம்பிதம் அடைந் துள்ளமையை காணக்கூடியதாய் உள்ளது.

கடந்த பங்குனி மாதம் 20 ஆம் திகதி மின்சாரம் வழங்கப் படும் என அறிவிக்கப்பட்டதை அடுத்து மின்சார இணைப்பு வேலைகளை பூர்த்தியாக்கிய பின் மின்சாரத்திற்காக காத்திருந்த மக்கள் ஏமாற்றத்தை எதிர் கொள்ள வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து இருள் சூழ்ந்த இக்கிராமத்திற்கு ஒளியூட்ட வேண் டுமென அப்பகுதி மக்கள் கோரி க்கை விடுத்துள்ளனர்.

(அ-3-263)

## கோட்டக்கல்வி அலுவலர் பதவிக்கான விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்தில் விரைவில் வெற்றிடமாகவுள்ள பருத்தித்துறை கோட்டத்திற்குப் பொறுப்பான கடமை நிறைவேற்றும் கோட்டக்கல்வி அலுவலர் பதவிக்கான விண்ணப்பங்கள் வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர் சி.நந்த குமாரினால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் இலங்கை அதிபர் சேவை தரம் 1 அல்லது இலங்கை அதிபர் சேவை தரம் 2-I ஐச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும் அத்துடன் விண்ணப்ப முடிவுத்திகதியிலிருந்து ஆகக் குறைந்தது 3 வருடங்களேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லை உடையவராயிருத்தல் வேண்டும்.

மேலும் இலங்கை அதிபர் சேவை தரம் 1 இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் இலங்கை அதிபர் சேவை தரம் 2-I ஐச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படுமென்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை வலயக் கல்வி அலுவலக நிர்வாக கிளையில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (அ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 85 | 100 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 35 | 20 | 30 | 40 |
| தக்காளி | 70 | 50 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 30 |
| கோவா | 10 | 10 | 20 | 20 |
| கரட் | 35 | 40 | 30 | 50 |
| பூசணி | 20 | 20 | 20 | 30 |
| புடோல் | 40 | 40 | 30 | 40 |
| வாழைக்காய் | 20 | 20 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 40-70 | 40-70 | 65 | 50-80 |
| பெரிய வெங்காயம் | 85 | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 100 | 80 | 90 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 50 | 80 |
| பயற்றங்காய் | 60 | 50 | 60 | 30 |
| லீக்ஸ் | 80 | 60 | 60 | 80 |
| பீற்றூட் | 20 | 40 | 30 | 60 |
| கறிமிளகாய் | 40 | 30 | 60 | 40 |
| முருங்கைக்காய் | 300-320 | 400 | 400 | 320 |
| போஞ்சி | 40 | 100 | 40 | 80 |
| கத்தரிதம்புள்ள | -- | 30 | -- | -- |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 40 | 80 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 30 | 25 | 20 |

## இராசி பலன்

23.04.2012
(சித்திரை 02, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
துதியை பிற்பகல் 5.21 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 5.49 மணிவரை
இராகுகாலம் 7.30-9.00 மணிவரை
சுபநேரம் 12.00-1.30மணிவரை
கார்த்திகை விரதம்

**மேடம்** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், நினைத்த காரியத்தை முடித்து நிம்மதி காணும் நாள்.

**இடபம்** குடும்ப பொறுப்புகள் கூடும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாக நடந்து கொள்வர், சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்,பண விரயங்கள் அதிகரிக்கப்படலாம், காரிய அலைச்சல்கள் உருவாகலாம் உங்களிடம் உதவி கேட்டு சிலர் வரலாம்.

**கடகம்** புதிய திருப்பங்கள் ஏற்படலாம், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம், கலகலப்பான செய்திகள் வந்து சேரும் நாள் பயணங்கள் செய்ய போட்ட திட்டங்கள் கைகூடும்.

**சிங்கம்** தொட்ட காரியம் துளிர் விடும் நாள், நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், உற்சாகத்துடன் பணி புரிந்து பலரது பாராட்டுக்களை பெறுவீர்கள், ஆரோக் கியமான நாள்.

**கன்னி** பற்றாக் குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், தந்தை வழியில் தன வரவுகள் கிடைக்கலாம், தொழில் போட்டிகள் மாறும்.

**துலாம்** உறவினர்களிடையே விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது, கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் தாமதமாகும்.

**விருச்சிகம்** தொழில் நன்மை கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமாணம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு** ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடைவீர்கள்.

**மகரம்** பிள்ளைகளால் பெருமையான செய்திகள் வந்து சேரும் நாள், மறைமுகப் போட்டிகள் மாறும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**கும்பம்** புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், தொலைபேசி வழித் தகவல்கள் ஆச்சரியப் பட வைக்கும், பெற்றோர் வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும்.

**மீனம்** உடன் பிறப்புக்களின் ஆதரவு பெரு கும் நாள், நீண்ட நாளைய கனவுகள் நனவாகலாம், இல்லத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன் வருவீர்கள், சுவாரஸ்யமான நாள்.

வளவன்

# இலங்கை மத்திய வங்கியின் 2011ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை

(கடந்த 16-ம் திகதியின் தொடர்ச்சி)

புடைவைகளும் ஆடைகளும் மிக முக்கியமான கைத்தொழில் ஏற்றுமதிகளாக தொடர்ந்தும் விளங்கியதுடன் அதற்கு அடுத்ததாக இறப்பர் உற்பத்திகளும் பெற்றோலிய உற்பதிகளும் விளங்கின.

இறக்குமதியில் ஏற்பட்ட கடுமையான அதிகரிப்பிற்கு இறக்குமதிகளின் அனைத்து முக்கிய வகைகளான நுகர்வோர்; இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களுக்கான உயர்ந்த கேள்வியும், அதே போன்று அதிகரித்த பன்னாட்டு பண்ட விலைகளும் காரணங்களாக அமைந்தன.

இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 2011இன் மொத்த இறக்குமதிகளில் 60.6 சதவீத்திற்கு வகை கூறியதுடன் இதற்கு பன்னாட்டு எண்ணெய் விலைகள் மற்றும் இறக்குமதிகளின் அளவு இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புகளின் காரணமாக பெற்றோலிய இறக்குமதிகள் மீது ஏற்பட்ட உயர்ந்த செலவினம் தூண்டுதலாக அமைந்தது.

அதிகரித்த உண்மை வருமானங்கள், உந்து ஊர்திகள் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட இலத்திரனியல் பொருட்களுக்கு ஏற்புடைத்தான காத்திரமான வரி வீதங்கள் குறைக் கப்பட்டமை என்பவற்றுடன் சேர்ந்து ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வட்டி வீதங்களில் கொடுகடன் வசதிகள் கிடைத்தமை என்பன 2011இல் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் 47.5 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு பங்களித்தன.

ஏற்றுமதி வருமானத்துடன் ஒப்பிடுகையில் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு, வர்த்தகப் பற் றாக்குறை 2010இன் ஐ.அ. டொலர் 4.8 பில்லியனில் இருந்து 2011இல் ஐ.அ.டொலர் 9.7 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்க அளவில் விரிவடைய வழி வகுத்தது.

தொழிலாளர் பணவலுப்பல்கள்,2011இலும் மிகப் பெரும் வெளிநாட்டு செலாவணி உழைப்பாளராக விளங்கி,தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக புடைவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களை விஞ்சிக்காணப்பட்டது.

மொத்த தொழிலாளர் பணவனுப்பல்கள் 2010இன் ஐ.அ.டொலர் 4.1 பில்லியனில் இருந்து ஐ.அ.டொலர் 5.1 பில்லியனுக்கு 25 சதவீத்தினால் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்தது.

நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2010இன் ஐ.அ. டொலர் 1.1 பில்லியனில் இருந்து 2011இல் ஐ.அ.டொலர் 4.6 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தது.

### இறைத் துறை அபிவிருத்திகள்

2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் வரி முறைமைகளை இலகுபடுத்துவதற்கும் நடுத்தர காலத்தில் அரசிறைத் திரட்டல்களை மேம்படுத்தும் விதத்தில் வரித் தளத்தினை விரிவாக்குவதற்குமான முக்கியமான சீர்திருத்தங்களை அறிவித்தது.

மேலும் மீண்டெழும் செலவினத்தினை ஒழுங்குமுறைப் படுத்துவதன் மூலம் இறைத் திரட்சிக்கான அதன் கடப்பாடுகளை அர்சாங்கம் மீண்டும் வலியுறுத்திய வேளையில்,அரச முதலீடுகள் உயர் மட்டத்தில் பேணப்பட்டன.

இதன்படி மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக 2011இல் திரண்ட இறைப் பற்றாக்குறை 2010இன் 8 சதவீத்தில் இருந்து 6.9 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

அரசிறையில் வீழ்ச்சி காணப்பட்டபோதும் மீண்டெழும் செலவினத்தின் மீதான கட்டுப்பாடுகளும் மூலதனச் செலவினத்திற்கான முன்னுரிமைப் படுத்தலும் 2011இற்கான மதிப்பீடுகளும் ஒத்துச் செல்லும் விதத்தில் இவ்வாண்டுப் பகுதியில் இறை நிலுவைகளை பேணுவதற்கு உதவின.

உயர்வடைந்து செல்லும் பன்னாட்டு விலைகளில் இருந்து உள்நாட்டுச் சந்தை மீதான அழுத்தங்களைத் தணிப்பதற்காக குறிப்பாக பெற்றோலியம் மற்றும் பால் மா இறக்குமதிகளின் மீது வழங்கப்பட்ட விலக்கல்களும் 2011இல் அரசிறைத் திரட்டல்களை மிக மோசமாகப் பாதித்தன.

இதன் விளைவாக மொ.உ. உற்பத்திக்கான அரசிறை விகிதம் 2010இன் 14.6 சதவீதத்தில் இருந்து 2011இல் 14.3சதவீதத்திற்கு வீழ்ச்சி அடைந்தது.

அரசு படுகடன் உறுதிப் பாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் முன்னேற்றங்கள் முன்னைய ஆண்டின் 81.9 சதவீத்தில் இருந்து 78.5 சதவீதத்திற்கு வீழ்ச்சி அடைந்த மொ.உ. உற்பத்திக்கான வெளிநின்ற படுகடன் விகிதத்தில் பிரதிபலிக்கப்பட்டது.

உள்ளூர் பணச் சந்தையில் ரூபாயின் திரவத் தன்மை தொடர்ந்தும் உயர்ந்து காணப்பட்டமையால் நாணயக் கொள்கையின் போக்கில் மாற்றத்திற்கதான சமிக்ஞையை காட்டும் அதேவேளை,அளவுக்கு அதிகமான திரவத் தன்மையின் ஒரு பகுதியை நிரந்தரமாக ஈர்த்துக் கொள்வதற்கு வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபாய் வைப்புப் பொறுப்புக்கள் மீது பிரயோகிக்கத்தக்க நியதி ஒதுக்கு வீதம் 2011 ஏப்ரலில் திருத்தியமைக்கப்பட்டது.

வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் விரைவாக விரிவடைந்தமையால் மத்திய வங்கி விரிவாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான தார்மீக ஒழுங்குகளை மேற்கொண்டவேளையில் வீழ்ச்சியடைந்து செல்லும் அளவுக்கு அதிகமான திரவத் தன்மைக்கு மத்தியில் விருப்பத்திற்குரிய மட்டத்தில் குறுகிய கால வட்டி வீதங்களை பேணுவதற்கு இவ்வாண்டின் பிற்பகுதியில் திறந்த சந்தை தொழிற்பாடுகளின் கீழ் நாளாந்த ஏலங்களை விதந்துரைத்தது.

குறிப்பாக இறக்குமதிகளின் உயர் வளர்ச்சி மற்றும் கொடுகடன் உள்ளிட்ட தோற்றம் பெற்றுவரும் பேரண்டப் பொருளாதார சமனிலையற்ற தன்மையைப் பரிசீலனையில் கொண்டும் பணவீக்கம் ஒற்றை இலக்க மட்டங்களில் தொடர்ந்து இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டும் மத்திய வங்கி 2012 பெப்ரவரியில் மீள் கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதத்தை ஒவ்வொன்றும் 50 அடிப்படைப் புள்ளிகளால் 7.50 சதவீதம் மற்றும் 9.00 சதவீதத்திற்கு உயர்த்தியவேளையில் கொடுகடன் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துமாறு 2012 மார்ச்சில் வர்த்தக வங்கிகளைப் பணித்தது.

பொருளாதாரத்தின் அனைத் து பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நாணய நிகழ்சித் திட்டம் விரிந்த பணத்தின் 14.5 சதவீதம் கொண்ட சராசரி வளர்ச்சியை எதிர் பார்ப்ப துடன் இது மொ.உ.உற்பத்தியின் பேரளவு வளர்ச்சியுடன் இணைந்து காணப்பட்டது.

உண்மை மொ.உற்பத்திக்கான ஆரம்ப எறிவுகள் 8.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியை எடுத்துக் காட்டியிருக்கையில், இவ்வாண்டுக்கான மொ.உ. உற்பத்தி சுருக்கி 6 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிதியியல் துறை செயலாற்றம் நிதியியல் நிறுவனங்களின் செலாற்றம் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேறியதுடன் போதுமான மூலதனம், திரவத் தன்மை மற்றும் இலாபகரத் தன்மை இருப்புக்களுடன் முன்மதியுடைய குறிகாட்டிகள் பேணப்பட்டன.

இவ்வாண்டின் அனேகமான காலப்பகுதியில் பண மற்றும் கொடு கடன் சந்தைகள் தொடர்ந்து திரவத்தன்மை உள்ளதாகவும் வட்டி வீதங்கள் தொடர்ந்து உறுதியாகவும் விளங்கின.

கொழும்பு பங்குச் சந்தையின் விலைச் சுட்டெண்கள் முன்னைய இரண்டு ஆண்டுகளின் எழுச்சிக்குப் பின்பு வீழ்ச்சி அடைந்திருக்கையில் 2011இல் ஆரம்பப் பங்கு வழங்கல் மற்றும் உரிமம் வழங்கல் மூலம் திரட்டப்பட்ட நிதியங்கள் கணிசமான அளவில் அதிகரித்தன.

உள்நாட்டு நிதியியல் சந்தை இவ்வாண்டில் பரந்தளவில் உறுதியாக விளங்கியது.

திரவத் தன்மை இக்கட்டான நிலைக்கு வந்ததுடன் இவ்வாண்டின் பிற்பகுதியில் வட்டி வீதங்கள் மீது மேல் நோக்கிய அழுத்தம் காணப்பட்டது.

கொழும்பு பங்குச் சந்தையின் பங்கு விலைச்சுட்டெண்கள் 2009 மற்றும் 2010இல் பங்குச் சந்தை பதிவு செய்த கவர்ச்சியான செயலாற்றத்தைத் தொடர்ந்து 2011இல் வீழ்ச்சியடைந்தன.

தரகர்களால் வழங்கப்பட்ட கொடுகடன் மீதான கட்டுப் பாடுகள், தொடர்ச்சியான தேறிய வெளிநாட்டுப் பாய்ச்சல்கள், அனேகமான முதன்மைப் பங்கு வழங்கல் மற்றும் தனிப்பட்ட பங்குகளுக்கு இடமளித்தல் என்பவற்றின் மீது ஏற்பட்ட திரவத் தன்மை இல்லாமை மற்றும் உலகளாவிய நிதியியல் சந்தைகளினது அபிவிருத்தியின் தாக்கம் பங்குச் சந்தையின் செயலாற்றம் மீது எதிர்மறையான விளைவை ஏற்படுத்தின.

கொழும்பு பங்குச் சந்தையின் வருமானங்களுக்கான சந்தை விலை விகிதம் வீழ்ச்சியடைந்ததுடன் வெளிநாட்டவர்கள் சந்தையில் தேறிய விற்பனையாளர்களாக விளங்கி 2009இன் பிற்பகுதியில் ஆரம்பித்த கீழ் நோக்கிய போக்கைத் தொடர்ந்தது.

முதன்மைப் பங்கு வழங்கல் செயற்பாடு உரிமங்களின் வழங்கல் ஊடாக சந்தையில் இருந்து திரட்டப்பட்ட நிதியங்களின் தொகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்டது.

### தோற்றப்பாடு

இலங்கையின் உறுதியான வளர்ச்சி உத்வேகம் நாட்டின் உயர் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் சென்று உலகின் மத்திய வருமான பொருளாதாரங்களுக்கு இடையே நிலைப்படுத்தியிருக்கிறது.

இத்தகைய பின்னணி யில், உள்ளார்ந்த வளர்ச்சியில் கீழ் நோக்கி இடர் நேர்வினை கொண்டிருக்கக்கூடிய சவால்கள் பொருளாதார கொள்கை முகாமைத்துவத்தின் மையப் புள்ளியாக மாறி வருகிறது.

உலகளாவிய பொருளாதாரத்தின் மீட்சி மிக பலவீனமாக காணப்படுகின்றமை மற்றும் இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதிச் சந்தைகளில் காணப்படும் புவிசார் அரசியலின் நிச்சயமற்ற தன்மை என்பன ஏற்றுமதி வளர்ச்சியைப் பாதித்து விடும்போல் தோன்றுகின்றது.

ஏற்றுமதிக்கான கேள்வியை சந்தைகளையும் உற்பத்திகளையும் பன்முகப்படுத்துவதன் ஊடாக மேம்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

அத்துடன் வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை குறிப்பாக நீண்டகால மூலதன உட்பாய்ச்சல்களை கவர்வதற்கான முயற்சிகள் வலுவாக்கப்படல் வேண்டும்.

பன்னாட்டு சந்தைகளில் காணப்பட்ட உயர்ந்த எண்ணெய் விலைகள் இலங்கை போன்ற எண்ணெயில் தங்கியிருக்கும் பொருளாதாரத்தின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை கொண்டிருக்க முடியும்.

வலுச் சிக்கன உற்பத்தி தொழில்நுட்பங்களை ஊக்குவித்தல், புதுப்பிக்கத்தக்க வலு மூல வளங்களை அதிகரித்தல் மற்றும் வலுப் பாதுகாப்பு ஆகிய நடவடிக்கைகளின் மூலம் உயர்ந்த எண்ணெய் விலைகளின் தாக்கத்தினை தணிப்பதற்கு சரியான கொள்கைகளை நடைமுறைப் படுத்தும் தேவை காணப்படு கின்றது.

மேலும் உள்நாட்டு வலு விலைகளில் பாரிய சீராக்கங்களை செய்வதற்கான தேவையை தவிர்க்க உதவும் என கருதப்படும் பன்னாட்டு வலு விலைகளின் அசைவுகளை பிரதிபலிக்கின்ற பொறிமுறை ஒன்று தேவையாகவுள்ள வேளையில் அது அரச தொழில் முயற்சிகள் மீதான சுமையினையும் குறைக்கின்றது.

தொழிற்சந்தையில் தொழில் இன்மையில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி தொழில்சந்தை நிலைமைகளை இறுக்கமாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழிலாளர் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கும் தொழிற்சந்தையில் காணப்படும் நெகிழ்ச்சி அற்ற அமைப்பியல் தன்மையினை கட்டுப்படுத்துவதற்கும் கொள்கைகள் அவசியமாகவுள்ள வேளையில் ஏதேனும் மனித வலுப் பற்றாக்குறைகள் காணப்படும் இடத்து அதனைக் கையாள மூலதனச் செறிவினை அதிகரித்தல் வேண்டும்.

இவ்வளர்ச்சி உத்வேகத்தினை தக்கவைத்துக் கொள்வதற்கு தேவையான தேர்ச்சிகளுடன் மனித மூலதனத் தளத்தினை உருவாக்குகின்ற விதத்தில் இலங்கையின் கல்வி முறையினை மீண்டும் சீர்படுத்துவதற்கு கவனத்தினை செலுத்துதல் வேண்டும் என்றுள்ளது.

(முற்றும்.)




## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5425.73 | 5457.13 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 4909.30 | 4923.57 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 1,879.38

உயர்வடைந்த பங்குகள் செரண்டிப் லாண்ட்(2100.00), அக்ஸ்டார் பேட்டி லைசர்(10.60),கெல்ஷே(15.50),செலிங்கோ இன்ஸ்.(940.90),சன்சைன் ஹோல்டிங்(21.30),

வீழ்ச்சியடைந்த பங்குகள் ஹெரஸ்னர்(215.00), சிஎப்ஐ(153.10), ஹேலீஸ்(எம்ஜிரி)(10.00), சிரஸ் லிசர்(3.80), சிடிஐசி(226.60).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 127.57 | 131.13 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 204.01 | 211.09 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 166.66 | 173.16 |
| சுவிஸ் பிராங் | 138.37 | 144.47 |
| கனேடிய டொலர் | 127.34 | 132.67 |
| அவுஸ்திரேலிய டொலர் | 130.63 | 136.39 |
| சிங்கப்பூர் டொலர் | 101.31 | 105.41 |
| ஜப்பான் யென் | 1.55 | 1.61 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.49 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.24 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# கடத்தல்களில் ஈடுபடுவோர் குறித்து

# அமைச்சர் ரவூப் ஹக்கீம் அறிவார்

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் கடத்தல்களில் ஈடுபடுவோர் யார் என்ற விபரங்களை அமைச்சர் ரவூப் ஹக்கீம் அறிவார் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடத்தல் சம்பவங்களுக்கும் மிகவும் உயர்மட்டத்தினருக்கும் தொடர்பு இருக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார் என விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

எனினும் கடத்தல்களுடன் யாருக்கு தொடர்பு இருக்கின்றது என்பதனை நேரடியாக ஹக்கீம் குறிப்பிடவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

முஸ்லிம் வர்த்தகர்கள் கடத்தப்பட்டு கப்பம் கோரப்பட்ட சம்பவம் தொடர்பில் அவர் இந்தக் தகவலை தெரிவித்துள்ளார்.

கடந்த 2007 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் திகதி அப்போதைய அமெரிக்க தூதுவர் ரெபேர்ட் ஓ பிளேக்கிற்கும் அப்போதைய தொலைத்தொடர்பு அமைச்சர் ஹக்கீமுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் அடிப்படையில் இந்தத் தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன்போது கடத்தல் தொடர்பான அழுத்தங்கள் முடிவடையும் வரையில் சில முஸ்லிம் வர்த்தகர்கள் வெளிநாடுகளில் வாழ்வதற்கு தீர்மானித்துள்ளதாக ஹக்கீம் பிளேக்கிடம் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கொழும்பில் பொலிஸாருக்கு எதிராக மக்கள் போராட்டம்

(கொழும்பு)

கொழும்பு பேஸ்லைன் வீதியைச் சேர்ந்த மக்கள் பொலிஸாருக்கு எதிராகப் போராட்டம் நடத்தியுள்ளனர். கொழும்பு பேஸ்லைன் புகையிரத விளையாட்டரங்கிற்கு அருகாமையில் வாழும் மக்களே இவ்வாறு பொலிஸாருக்கு எதிராக போராட்டம் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.மக்கள் நடத்திய போராட்டத்தினால் பேஸ்லைன் வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டது.

அயலவர்கள் சிலரை பொலிஸாரும் அதிரடிப்படையினரும் திட்டமிட்டு கடத்திச் சென்று போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (அ-2)

# அமைச்சர் பதவி வேண்டும்; அடம்பிடிக்கும் ஜெயசூரிய

(கொழும்பு)

சனத் ஜெயசூரிய உள்ளிட்ட ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு அமைச்சர் பதவி தரப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் ஜெயசூரிய, நிசாந்த முத்து ஹெட்டிகம, றியர் அட்மிரல் சரத் வீரசேகர, லக்ஸ்மன் வசந்த பெரேரா ஆகியோரே தமக்கு அமைச்சர் பதவி தரப்பட வேண்டும் என்று கோரியுள்ளனர்.

இவர்கள் நால்வரும் இணைந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இது தொடர்பான கடிதம் ஒன்றை அண்மையில் கையளித்துள்ளனர்.

தாம் அமைச்சர் பதவிக்காக நீண்ட காலமாக காத்திருப்பதாகவும் நாடாளுமன்ற தேர்தலில் தாம் பெற்ற வாக்குகளையும் திறமையையும் கருத்தில் கொண்டு அமைச்சர் பதவியைத் தருவது குறித்து ஆலோசிக்குமாறு இவர்கள் கோரியுள்ளனர்.

இது குறித்து தாம் பரிசீலிப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்துள்ளன. (அ-2)

# தபால் சேவைகள் தொடர்பில் கருத்துக்களை பெற முடிவு

(கொழும்பு)

இலங்கையின் தபால் சேவைகள் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக் களை அறிந்து கொள்வதற்கு தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு பிரதேச ரீதியாகவும் கருத்துக்களை பெற்றுக்கொள்ள இருப்பதாக தபால் மா அதிபர் ரோஹண அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்தின் வருமானத்தை அதிகரித்துக்கொள்ளும் நோக்கிலேயே இச் செயற்றிட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தபால் திணைக்கள ஊழியர்கள் பல்வேறு நிறுவனங்களுக்கும் சென்று இந்தக் கருத்துப்பெறும் நடவடிக்கையில் ஈடுபவர் எனவும் தபால்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-2)


## பதவி வெற்றிடம்

- ★ ஒவ்செற் இயந்திர இயக்குநர்கள் (பயிலுநர், ஆண்கள்)
- ★ பத்திரிகை மடிப்பவர்கள் (ஆண்கள்)

மேற்படி இரண்டு வெற்றிடங்களுக்கும் கிளிநொச்சி முல்லைத்தீவைச் சேர்ந்தவர்களிட மிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. தெரிவு செய்யப்படுவர்களுக்கு தகுந்த வேதனத்துடன் உணவு மற்று தங்குமிடவசதி வழங்கப்படும்.

பொருத்தமானவர்கள் தங்கள் விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை

மனிதவள முகாமையாளர்<br>
வலம்புரி<br>
இல.3,2 ஆம் ஒழுங்கை,<br>
பிறவுண் வீதி,<br>
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று புதிய வட பிராந்திய பிரதம பிராந்திய முகாமையாளரைப் பெற்றுத் தருவதற்கும் எமது ஊழியர்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பதற்கும் உதவிகள் புரிந்த கௌரவ அமைச்சர் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர்

**கே.என். டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும் தோழர் தயானந்தா, தோழர் ரஹீம்,தோழர் கமல், ஆகியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய புதிய பிரதம பிராந்திய முகாமையாளர் திரு.செயினுலாப்தீன் அஸ்கர் அவர்களின் சேவை வளம் பெற எமது தொழிலாளர்களின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கின்றோம்.

வடமாகாண ஜனநாயக போக்குவரத்து<br>
ஊழியர் சங்கம் - யாழ்ப்பாணம்

(8219)



தங்கத் திருநாளாம்

அக்ஷய திருதியை தினத்தில்<br>
காலை 7.00 மணிமுதல்<br>
மாலை 9.30 மணி வரை<br>
திறந்திருக்கும்





தங்கத் திருநாளான எதிர்வரும் (24.04.2012) செவ்வாய்க்கிழமை எம்மிடம் தங்க நகைகளை கொள்வனவு செய்யும் அன்பார்ந்த வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சிறப்பு அன்பளிப்பு பொருட்கள் வழங்கப்படும்





தரம், நாணயம்,<br>
உத்தரவாதம் கொண்ட நகைகளைக்<br>
கொள்வனவு செய்ய<br>
நாடவேண்டிய ஒரே இடம்

## மைதிலி நகை மாடம்

89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 7902



## யாழ்.மைதிலி ஜுவலரி

79Z, செட்டியார் தெரு, கொழும்பு-11.

0112396239

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(அ-6418)

# வெளிமாவட்டத்திற்கான தனியார் பேருந்து நிலையத்தை கவனிப்பார்களா?

## பயணிகள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் பேருந்து ஒன்றியத்தினால் நடத்தப்படும் வெளி மாவட்டங்களுக்குரிய முற்றவெளியில் உள்ள பேருந்து நிலையம் பயணிகளுக்கான வசதிகள் இன்றிக் காணப்படுவதாக பயணிகள் ஆதங்கப்படுகின்றனர்.

இலங்கையின் 24 மாவட்டங்களுக்கான தனியார் பேருந்து சேவையானது இச்சாலையூடாகவே நடைபெறுகின்றது. தினமும் ஆயிரக்கணக்கான பயணிகள் ஒன்றுகூடும் இப்பேருந்து நிலையத்தில் அடிப்படை வசதிகளான மலசலகூடம் பயணிகள் தரிப்பிடம் எதுவுமில்லாமல் உள்ளதுடன் சுகாதாரச் சீர்கேடுகள் காணப்படுகின்றது.

இப்பேருந்து நிலையச் சுற்றாடல் குப்பை கூழங்களால் நிறைந்து காணப்படுகின்றது.

இதற்கு பின்புறமாக கழிவு வாய்க்கால் ஓடுகின்றது. இதற்குள் பேருந்து நிலையத்தின் கழிவுகள் கலக்கின்றது.

அருகில் உள்ள பற்றைக்குள் மதுப்பிரியர்களின் வெற்றுப்போத்தல்கள் நுளம்புகளின் வசிப்பிடமாக மாறியுள்ளதைக் காணமுடிகின்றது.

அத்துடன் பேருந்து நிலையத்தின் தரைப் பகுதியிலும் மழைநீர் தேங்கி சேற்று நிலமாக காணப்படுகின்றது.

பயனாளிகள் தமது பேருந்து வரும் வரை நீண்ட நேரம் நிற்கவேண்டியுள்ளது. இருப்பதற்கோ வெயிலுக்கு ஒதுங்குவதற்கோ போதுமான இடமில்லை.

எனவே பல்வேறு குறைபாடுகளுடன் இப்பேருந்து நிலையம் இயங்குகின்றது. இதற்குள் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் அலுவலகம், தனியார் பேருந்து ஒன்றியத்தின் அலுவலகம் என்பன உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பேருந்து சாலைக்கு அருகில் உள்ள இந்து ஆலயத்திற்கு பக்தர்கள் செல்லமுடியாத வகையில் வீதியோரத்தில் அனுமதியற்ற சுகாதார மற்ற முறையில் சிற்றுண்டிகள் விற்கும் கடைகளும் நடைபாதை வியாபாரிகளின் கடைகளும் காணப்படுகின்றது.

இப்பேருந்து நிலையத்தை சீரான முறையில் இயக்குவதற்கு ஆவன செய்து தருமாறு இத்துறை சார்ந்த அதிகாரிகளுக்கு பயணிகள் கோரிக்கை ஒன்றை விடுக்கின்றனர். (அ-3-15)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம், ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## வதிரி டயமன்ஸ் அணி பனால்டிமூலம் வென்றது

(கரவெட்டி)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தினால் நடத்தப்படும் சிறந்த 64 அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப்போட்டி நடைபெற்றது.

இதில் மன்னார் சென் அன்ரனிஸ் அணியை பரபரப்பான பனால்டி உதைமூலம் தோற்கடித்து வதிரி டயமன்ஸ் அணி வெற்றிபெற்றது.

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் மன்னார் சென் அன்ரனிஸ் அணியும் வதிரி டயமன்ஸ் அணியும் மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் 2:2 என்ற கோல்க் கணக்கில் போட்டியைச் சமனாக்கினர்.

இதில் டயமன்ஸ் அணிசார்பாக பிரியாங்கன், துசிகரன் ஆகியோர் தமது அணிக்காக கோல்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

மன்னார் சென் அன்ரனிஸ் சார்பாக சோய்யா இரு கோல்களைத் தனது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார்.

இறுதியில் பனால்டி உதையில் வதிரி டயமன்ஸ் அணி 3:0 என்ற பனால்டி உதை மூலம் வெற்றிபெற்றது. (அ-3-24)

## கருத்தரங்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபையின் சரசாலை பொதுநூலகத்தின் உலக புத்தக தினத்தை முன்னிட்டுக் கருத்தரங்கும் எழுத்தாளர் கௌரவிப்பும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சரசாலை பொதுநூலக மண்டபத்தில் சபைத்தவிசாளர் சி.துரைராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் எழுத்தாளர் மு. பாலசுப்பிரமணியம் கௌரவிக்கப்படுவதுடன் அவரினால் பண்பட்டுப் பயன்பெறும் அன்புற்ற வாழ்வு என்ற தலைப்பில் கருத்தரங்கும் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செ. ஜெகதீசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-29)




## பெண்களுக்கான கிரிக்கெட்டில் மாலுசந்தி மைக்கல் சம்பியன்



(கரவெட்டி)

பெண்களுக்கான கிரிக்கெட் இறுதிப் போட்டியில் வதிரி டயமன்ஸ் அணியை 56 ஓட்டங்களால் தோற்கடித்து மாலுசந்தி மைக்கல் அணி சம்பியனாகியது.

கரவெட்டி பிரதேச இளைஞர் அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் விளையாட்டு விழாவில் பெண்களுக்கான கிரிக்கெட் இறுதிப்போட்டி நேற்றுமுன்தினம் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 91 ஓட்டங்களை பெற்றது.

இதில் பிரதீபா, தயானி தலா 26 ஓட்டங்களையும் தர்மினி 23 ஓட்டங்களையும் தமது அணிக்காக பெற்றுக்கொடுத்தனர்.

டயமன்ஸ் அணி பந்துவீச்சின் சார்பாக தர்சிகா ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டயமன்ஸ் அணி 5 ஓவர் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 36 ஓட்டங்களை பெற்றது.

இதில் மேரி கோல்டா 10, இந்துகா 6, ஓட்டங்களையும் பெற்றனர். மைக்கல் அணியின் பந்துவீச்சின் சார்பில் ராகினி, தயானி, விதுஷா, தர்மினி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இறுதியில் 56 ஓட்டங்களினால் மாலுசந்தி மைக்கல் அணி வெற்றி பெற்று கரவெட்டி இளைஞர் கழகம் சம்பியனாகியது. (அ-3-24)

## பொது அறிவுப்போட்டி

(சாவகச்சேரி)

நூலக மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தில் இம்மாதத்திற்கான பொது அறிவுப்போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் நூலக எல்லைக்குட்பட்ட வாசகர்களை கலந்து பயன்பெறுமாறு நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (அ-3-29)

## பொது அறிவு போட்டி முடிபு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் நூலக மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கடந்த பங்குனி மாதம் நடத்தப்பட்ட பொது அறிவுப்போட்டியின் முடிபுகளை நூலகர் இ. தர்மலிங்கம் அறிவித்துள்ளார்.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

க.ஜசிதா (சரசாலை தெற்கு), சி.கஜானனன் (மட்டுவில் வடக்கு), ஏ.கௌசிகா (சரசாலை தெற்கு) (அ-3-29)

## தமிழ் தட்டச்சு விசைப்பலகை பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வதிரி கரவெட்டியில் அமைந்துள்ள வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தால் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்காக தமிழ் தட்டச்சு விசைப்பலகை பயிற்சியை மூன்று மாதங்களுக்கு இலவசமாக நடத்தவுள்ளதாக வடமராட்சி சுருக்கெழுத்துக்கழக தலைவர் வே. விமலன் அறிவித்துள்ளார்.

ஆர்வமுடையோர் எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் 2 மணி வரை கழகத்திற்கு நேரடியாக வந்து பதிவு செய்து கொள்ளலாம் என அவர் கேட்டுள்ளார். (அ)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக் கேணி கிராமத்தில் நாளை செவ்வாய்க்கிழமை வெற்றிலைக்கேணி பொதுமண்டபத்தில் இங்குள்ள வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பு பூசி ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பயன்பெறுமாறு பருத்தித்துறை சுகாதார பணிமனையினர் அறிவித்துள்ளனர். (அ-3-64)

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 13.04.2012 முதல் 13.05.2012 வரை



## மேடம்

**அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையை சிறப்பாக அமத்துக் கொள்ளும் மேட இராசி நேயர்களே!**

## பொருளாதாரநிலை நன்கு உயரும்...!

## உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர்

செவ்வாயின் ஆதிக்கத்தில் பிறந்த நீங்கள் செல்வாக்கு மிக்கவர்களாக விளங்குவீர்கள். பணபலமும் மனபலமும் உங்களுக்கு பக்கபலமாக இருக்க, அன்பு நண்பர்களின் ஒத்துழைப்பு உங்களுக்கு கிடைக்கு. மற்றவர்களை மதிக்கும் குணமும் துதிக்கும் குணமும் உங்களுக்கு உண்டு.

உங்களுக்கு இந்த சித்திரை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது இராசிநாதன் செவ்வாயை குரு பார்க்கிறார். எனவே, குரு மங்கள யோகம் எற்படுகிறது. குடும்பத்தில் சுபகாரிபேச்சுக்கள் முடிவடைவதற்கான அறிகுறிகள் தோன்றும் குழந்தைகள் நலனுக்காக ஒரு தொகையை செலவிட்டு மகிழ்வீர்கள். குடும்ப முன்னேற்றம்கருதி எடுக்கும் திடீர் முடிவுகள் வெற்றிபெறும். சனியின் வக்ர இயக்கம் உங்களுக்கு நன்மையே வழங்கும் என்பதால், எதிரிகள் விலகுவர். உத்தியோக முன்னேற்றம், ஊதிய உயர்வு போன்றவைகள் தானாகவே வந்துசேரலாம். தலைமை பதவியில் உள்ளவர்கள் உங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு கொடுப்பர்.

இரண்டில் கேது இருப்பதால், உறவினர்களிடம் ஏதேனும் வாக்கு கொடுத்தால் கொஞ்சம் யோசித்துக் கொடுப்பது நல்லது. கொடுத்த வாக்கை கடைசி நேத்தில்தான் காப்பாற்ற இயலும் ஆறுக்கு அதிபதி மாதத் தொடக்கத்தில் உச்சம் பெறுவதால், கடன்சுமைகள் பாதிக்குமேல் குறையும். கடனுக்கு வட்டி கட்டியே வரவில்பாதி செலவாகிவிட்டதே என்று நினைத்தவர்கள் இனி கவலைப்படத் தேவையில்லை. பஞ்சமாதிபதியும் இராசிநாதனும் பரிவர்த்தனையாகும் இந்த மாதத்தில் நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே நடைபெறும். இருப்பினும், அஷ்டமத்து இராகுவிற்கு பரிகாரமாக செவ்வாய் தோறும் துர்க்கைக்கு அர்ச்சனை செய்வது நல்லது. யோகபலம்பெற்ற நாளில் சர்ப்ப சாந்தியை முறையாக செய்தால் முன்னேற்றம கிடைக்கும்

ஏப்ரல் 29 ஆம் திகதி மேஷ இராசியில் புதன் சஞ்சரிக்க போகிறார். 3,6க்கு அதிபதி இராசியில் சஞ்சரிக்கும்போது உத்தியோக மாற்றம், இடமாற்றங்கள் இலாகா மாற்றங்கள் போன்றவைகள் ஒருசிலருக்கு ஏற்படும். இந்த தற்காலிக மாற்றத்தை உபயோகப்படுத்திக் கொள்ளாமல் இருந்தால், மீண்டும் சனி துலாம் இராசியில் சஞ்சரிக்கும்போது வரும் மாற்றத்தை ஏற்றுக்கொள்ளலாம். பிறகு வரும் மாற்றம்தான் பெரிய மாற்றம் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

மிதுன இராசியில் மே2- ஆம் திகதி சுக்ரன் சஞ்சரிக்க போகிறார். 2-க்கு அதிபதியாக 3 ல் சஞ்சரிக்கும்போது வேண்டிய பொருளை, வேண்டிய நேரத்தில் வாங்கும் அளவிற்கு பொருளாதாரநிலை உயரும். உடன்பிறப்புகள் உதவிக்கரம்நீட்ட முன்வருவர். களஸ்திர ஸ்தானாதிபதியாகவும் சுக்ரன் விளங்குவதால் வாழ்க்கைத்துணை வழியே உறவு மேம்படும். அவர்களுக்காக வேலை மற்றும் தொழில் ஏற்பாடுகளை செய்திருந்தால், அது கிடைத்து அதன் மூலம் உதிரி வருமானங்களும் வந்துசேரும். வாகன யோகம்உண்டு. பயணங்கள் அதிகரிக்கும். அந்திய தேசத்தில் இருந்து அனுகூலச் செய்திகள் வந்துசேரலாம். இம்மாதம் சூரிய, செவ்வாய் பரிவர்த்தனையால் சுகங்களும், சந்தோஷங்களும் கிடைக்க ஞாயிற்றுக்கிழமை அன்று முருகப்பெருமான் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

இராசிநாதன் பரிவர்தனை யோகம் பெற்றிருப்பதால், நினைத்த காரியத்தை நினைத்தபடியே முடிக்கும் மாதம் இது. நிகழ்காலத்தேவைகள் பூர்த்தியாகும். தங்கம்,வெள்ளி போன்றவைகள் வாங்கவேண்டும் என்ற ஆசை நிறைவெறும். பெண் குழந்தைகளின் சடங்கு நிகழ்ச்சிகள், திருமண விழாக்கள் போன்றவற்றைச் சந்திக்கும் நேரமிது. கணவன்-மனைவிக்குள் உறவு மேம்படும். வக்ர சனியின் ஆதிக்கம் வளர்ச் சியைக் கொடுக்கும் என்பதால், சனிக்கிழமை அன்று அனுமன், சனீஷ்வரர் கவசம் பாடி வழிபாடு செய்யுங்கள்.

## ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்



## இடபம்

**கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் , ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 பாதங்கள்**

**வந்தது இராஜயோகம்!**

**உழைப்பின் மூலம் உயர்ந்த நிலையை அடையும் இடப இராசி நேயர்களே!**

## இம்மாதம் பணபலம் கூடும் நேரம்

## வாய்ப்புகள் வாயில் கதவைத்தட்டும்

மற்றவர்கள் மனதை தன்பால் ஈர்க்கும் ஆற்றல் பெற்றவர்கள் நீங்கள். செல்வந்தர்களின் பட்டியலில் சேரவேண்டும் என்ற வைராக்கியத்தில் இரவு , பகல் பார்க்காமல் எப்போதும் உழைப்பவர்கள் நீங்கள். சுக்கிர பலம் உங்களுக்கு நன்றாக இருப்பதால், பணம் உங்கள் கையில் புரண்டுகொண்டேஇருக்கும்.

உங்களுக்கு இந்த சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்த பார்க்கும்போது மாதத்தொடக்க நாள் சந்திராஸ்டமத்தில் இருப்பதால் தொடங்கும் நாளிலேயே விநாயகப் பெருமானுக்கு சிதறுகாய் உடைத்து துன்பங்கள் விலகியோடவேண்டும், இன்பங்கள் இல்லம்தேடி வர வேண்டும் என்று வேண்டிக்கொள்ளுங்கள். வக்ர சனியின் இயக்கம் புதிய புதிய திட்டங்களைத்தீட்டி பொருளாதாரநிலையைப் பெருக்க வைக்கும். விரயஸ்தானாதிபதி செவ்வாய் நான்காம் இடத்திலும், 4க்கு அதிபதி சூரியன் பன்னிரண்டாம் இடத்திலும் பரிவர்த்தனை பெற்றிருப்பதால் வாங்கிய இடத்தை விற்றுவிட்டு புதிய இடங்கள் வாங்குவதிலும், கட்டிய வீட்டில் பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடரும் சூழ்நிலையும் இம்மாதத்தில் உருவாகலாம்.

இராகு கேதுக்களின் ஆதிக்கம் ஜென்ம இராசியிலும் 7 ஆம் இடத்திலும் இடம்பெறுவதால் ஏற்ற இறக்கமான வாழ்க்கையே உங்களுக்கு சமீப காலமாக வந்துகொண்டிருக்கிறது. ஒருகாலத்தில் மிகவும் சிறப்பாக இருப்பீர்கள். மற்றொரு காலத்தில் பத்து ரூபாய்க்குக்கூட வழியில்லையே என்று சொல்வீர்கள் எனவே, சர்ப்பக் கிரகத்துக்கு உரிய வழிபாட்டை நாகஸ்தலங்களுக்குச் சென்று யோக பலம்பெற்ற நாளில் செய்தால் தேக நலனும் சீராகும். செல்வநிலையிலும் எதிர்பார்த்த உயர்வு கிடைக்கும். இராகு வழிபாடு உங்களுக்கு இராஜயோகத்தையே வழங்கலாம்.

இது வரை தனாதிபதி உச்சம் பெற்று மீனத்தில் சஞ்சரித்து வந்தார் அப்படி உச்சம்பெற்ற புதன் மேட இராசிக்குள் ஏப்ரல் 29 ஆம் திகதி அடியெடுத்து வைக்கிறார். இதன் விளைவாக சுபவிரயங்கள் அதிகரிக்கும். வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். அத்தியாவசியத் தேவைகள் முதல் ஆடம்பரத்தேவைகள் வரை வாங்குவீர்கள். பஞ்சமாதிபதியாகவும் புதன் விளங்குவதால் பிள்ளைகள் வழியிலும் பெரும் செலவுஏற்படலாம்.

மே 2 ஆம் திகதி உங்கள் இராசிநாதன் சுக்ரன் தனஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போகிறார். பணபலம் கூடும் நேரமிது இது. வராத பாக்கிகள் வசூலாகும். வாய்ப்புகள் வாயில் கதவைத் தட்டும். குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறத்தொடங்கும். குழம்பிய மனம் மாறும். பலம் வாய்ந்தவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து, பக்குவமாக சில காரியங்களை முடித்துக் கொடுப்பார்கள்.

இம்மாதம் நந்தி வழிபாடும் நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுக்கும் என்பதால், பிரதோஷ நாளில் நந்தியை வழிபட்டு நலம் காணுங்கள்.

சுக்ர பலம்கூடும் இந்த நேரத்தில் கணவன்- மனைவிக்குள் கனிவு கூடும். காரிய வெற்றி அடுக்கடுக்காக வந்துகொண்டே இருக்கும். தொழில் தொடங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். தொகை வரவேண்டிய இடத்திலிருந்து வந்து சேர்ந்தது கண்டு ஆச்சரியம் அடைவீர்கள் உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலையும் உருவாகலாம் அரசுவழி கடனுதவிகளும் கிடைக்கும் மாதத்தின் முதல் வாரத்தில் விரயம் ஏற்படலாம் அடுத்த வாரம் முதல் அற்புத பலன்கள் கிடைக்க அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

(தொடரும்)

# வாழ்வாதார நிவாரணங்களை மக்களுக்கு முதலில் வழங்குங்கள்

## ஐ. தே. க. வலியுறுத்து

(கொழும்பு)

அரசாங்கம் மக்களை மேலும் நெருக்கடியில் ஆழ்த்தக்கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கம் தொடர்ந்தும் மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதனை ஏற்கமுடியாது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவுகளை எதிர்நோக்க மக்களுக்கு சக்தி கிடையாது. மக்களுக்கு நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு பிரச்சினை, சர்வதேச பிரச்சினை என பல்வேறு நெருக்கடிகளை மக்கள் மீது தயவுசெய்து திணிக்க வேண்டாம். பிரச்சினைகளை தீர்க்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். மக்கள், எதிர்க்கட்சியினர், நாடாளுமன்றம் ஆகியவற்றின் கருத்துக்களை அறிய வேண்டுமென பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதனை காலம் தாழ்த்துவது உசிதமாகாது.

மக்கள் கோரும் வாழ்வதற்கான நிவாரணங்களையே அரசாங்கம் முதலில் வழங்க வேண்டும் என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். ஐக்கிய இலங்கைக்குள் நியாயமான தீர்வு வழங்கப்பட வேண்டும்.

இதன்போது கருத்து வெளியிட்ட சஜித் பிரேமதாச ஐக்கிய இலங்கைக்குள் நியாயமான தீர்வுத்திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும்.

இது குறித்து அவர் கூறுகையில்,

ஒன்றுபட்ட இலங்கையில் வடக்கு, கிழக்கு பிரதேச மக்களுக்கான தீர்வு வழங்கப்பட வேண்டும். தீர்வுத்திட்டம் காலதாமதப்படுத்தப்படுவது சாதக நிலைமைகளை ஏற்படுத்தாது.

தீர்வுத்திட்டம் முன்வைப்பதனை காலம் தாழ்த்துவதனால் ஐக்கிய இலங்கை என்ற எண்ணக்கருவிற்கு பங்கம் ஏற்படக்கூடும். மீண்டும் பிரிவினைவாதத்தின் விதைகள் குறித்த பிரதேசங்களில் விதைக்கப்படக்கூடும்.

வடக்கு, கிழக்கிற்கான அரசியல் தீர்வுத்திட்டம் எதுவாக இருந்தாலும் அது ஐக்கிய இலங்கை, பௌதீக ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அமைய வேண்டுமென சஜித்பிரேமதாச தெரிவித்துள்ளார். (அ-2)

# பாபாவின் சாந்தி நடைபயணம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பகவான் மகா சமாதியடைந்து ஓராண்டு வருடப் பூர்த்தி நாளை செவ்வாய்க்கிழமை அடியார்களால் மூன்று விதத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கமைய சாந்தி நடைபயணம், சேவைத்திட்டம் அன்றைய தினம் காலை 6 மணிவரை 12 மணித்தியால தொடர் பிரார்த்தனை ஆகிய நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இல 166/5, சேர் பொன் இராமநாதன் வீதியிலுள்ள ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

சாந்தி நடைபயணம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன்பாகவுள்ள யாழ்ப்பாணம் ஸ்ரீ சத்திய சாயிசேவா நிலையத்தில் இருந்து ஆரம்பமாகி நடைபெற்று வந்ததாக வடபிராந்திய சத்திய சேவா நிலையங் களின் இணைப்புக்குழு குறிப்பிட்டுள்ளது.(அ-2)

# மகாத்மா காந்தி சிலையைக் கூட சந்திக்காத சுஷ்மா தமிழர்களுக்கு என்ன தீர்வை தருவார்?

## அரியநேத்திரன் எம்.பி. கேள்வி

இலங்கை வந்த சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய பாராளுமன்ற குழுவால் மட்டக்களப்பில் தாக்குதலுக்கு உள்ளாகிய இந்தியாவின் தேசபிதாவான மகாத்மாகாந்தியை கூட சந்திக்க முடியவில்லை என்றால் தமிழர்களின் உண்மை நிலையை அறிந்து எவ்வாறு தீர்வை பெற்றுத்தர முடியும்? என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இந்திய குழுவின் இலங்கை விஜயம் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் கருத்துரைக்கையில்,

அண்மையில் தலை துண்டிக்கப்பட்டு புனரமைக்கப்பட்ட மகாத்மாகாந்தி சிலையையும் பார்வையிடுவார்கள் என பலரும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் நடந்தது என்னவென்றால் இந்தியக் குழுவால் இலங்கையின் நிகழ்ச்சி நிரலை மீறி செயற்பட முடியாமல் போயுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் தம்புள்ளையில் அமைந்துள்ள பள்ளிவாசல் மீது பௌத்த மதத்தலைவர்கள் அடங்கிய குழுவினர் பள்ளிவாசலை அகற்றக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் ஆர்ப்பாட்டகாரர்கள் அந்த பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பௌத்தமதத் தலைவர்களின் மேற்படி நடவடிக்கைகளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வன்மையாக கண்டிப்பதுடன் இது போன்ற சம்பவங்கள் இனியும் நடைபெறுவதற்கு அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது என கேட்டுக்கொள்கிறோம் என அவர் தெரிவித்தார். (அ-2)

# மிலிந்த உலக வங்கியில் பதவியாம்

கொழும்பு மாநகர சபையின் எதிர்க்கட்சி தலைவர் மிலிந்த மொரகொட அந்த பதவியில் இருந்து விலக தீர்மானித்துள்ளதாகவும் அவர் நாளை மறுதினம் தனது இராஜினாமா கடிதத்தை கொழும்பு மாநகர சபையில் கையளிக்கவுள்ளதாகவும் தெரியவருகிறது.

உலக வங்கியில் பதவி ஒன்று வழங்கப்பட்டுள்ளதை அடுத்தே மிலிந்த மொரகொட இந்த பதவியில் இருந்து விலக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மொரகொட பதவியை இராஜினாமா செய்ய உள்ளதையடுத்து அந்த பதவியில் அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் மஹ்ரூப் நியமிக்கப்படவுள்ளார். (அ-2)

# மக்களுக்கு சேவையாற்ற இலங்கைக்கு வருவேன்

## குமார் குணரட்னம் கூறுகிறார்

தன்னை நாடு கடத்தியதன்மூலம் மக்களிடமிருந்து தன்னை விலக்குவதற்கு முதலாளித்துவ ஆட்சியாளர்கள் முயற்சித்தாலும் இம்மக்களுக்கு அரசியல் ரீதியாக சேவை யாற்றுவதை தடுக்க முடியாது என அவுஸ்தி ரேலியாவுக்கு நாடு கடத்தப்பட்ட முன்னிலை சோசலிஷக் கட்சியின் தலைவர் பிரேம்குமார் குணரட்னம் கூறியுள்ளார்.

கொழும்பில் வெளிவரும் ஆங்கில ஊடக மொன்றிற்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் கூறியவை வருமாறு,

நாம் மார்க்சிஷம், லெனிசிஷம் ஆகியவற்றை பின்பற்றுபவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக நாம் பணியாற்றுகிறோம். உலகின் எந்த பாகத்திலிருந்தாலும் நாம் அவர்களுக்காக பணியாற்றலாம். அவர்களின் மொழி, நாடு, இன அடையாளங்கள் எம்மைப் பாதிக்காது. ஆனாலும் இலங்கையில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பணியாற்றுவதில் நான் அதிக ஆர்வம் கொண்டுள்ளேன்.

தற்போதைய ஜனநாயக விரோதப் போக்கில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்திய பின்னர் நிச்சயமாக நான் இலங்கை மக்களுக்காக சேவையாற்ற வருவேன்.'

ஆட்சியாளர்கள் எனது வாழ்க்கையை அழிக்க விரும்பினார்கள். எமது அரசியல் ,நெறிமுறையை அழிக்கவும் அவர்கள் முயற்சித்தார்கள். எனக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்த விடயத்தை உலகெங்கும் உள்ள முற்போக்கு சக்திகளிடம் கொண்டு செல்வேன். ஆனால் முதலாளித்துவ முறைமையின் கீழ் இயங்கும் எந்த நீதிமன்ற அமைப்பிற்கும் நான் செல்லப் போவதில்லை.

இன்றைய ஜனநாயக விரோத ஆட்சியில் அந்த உரிமை ஆபத்துக்குள் ளாகி உள்ளது. இலங்கையில் ஊடகத்துறைக்கு என்ன நடக்கிறது என்பது உங்களுக்கு தெரியும். உயிருக்கு பயந்த ஊடகவியலாளர்கள் சிலர் தலை மறைவாகியுள்ளனர். வேறுசிலர் தமது அடையாளங்களை மறைக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இந்நிலைமை ஊடகத் துறைக்கும் அரசியலுக்கும் பொதுவானது.

இலங்கையிலோ வெளிநாட்டிலோ எந்த நீதிமன்றத்திலும் ஆஜராக நான் தயார். அத்துடன் மக்களிடம் சென்று எனது பாதுகாப்புக்காக மேற்கொள் ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விளக் கவும் நான் தயார் என்றார். (அ-2)



யாழ்ப்பாண சிறைச்சாலை கைதிகளும் யாழ்ப்பாண மாநகர சபை ஊழியர்களும் இணைந்து நேற்று முன்தினம் யாழ். நகரின் ஆஸ்பத்திரி வீதி யாழ்.பேருந்து நிலையப் பகுதிகளில் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகளில் ஈடுபட்ட போது...

(படங்கள்:- மல்லாவிச் செய்தியாளர், என்.குமார்

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 100


உக்ரேனியப் போர்முனையில் சோவியத்தின் துருப்புகள்

மல்தாவியாவின் பல பிரதேசங்களில், குறிப்பாக கிஷினேவிற்கு மேற்கேயும் தென்மேற்கேயும் இருந்த காடுகளில் கடும் சண்டைகள் நடந்தன. ஆனாலும், பாசிஸ்டுகளால் கெரில்லாப்படை வீரர்களின் இயக்கத்தை முறியடிக்க இறுதிவரை இயலவேயில்லை.


பாசிச ஜேர்மனிக்கு எரிபொருளையும் உணவுப் பொருளையும் அளித்த ருமேனியா, பல்கேரியா மற்ற பால்கன் தீபகற்ப நாடுகள் ஆகியவற்றை எப்படியாவது தன்வசம் வைத்திருக்க ஹிட்லர் படைத் தலைமை முயன்றது. ருமேனியாவின் எண்ணெயை விட பைலோருஸ்யக் காடுகளை இழக்க நான் தயார் என்று ஹிட்லர் ஒரு கூட்டத்தில் அறிவித்தான். பீரங்கிக்குத் தீனி போடும் நாடு என்ற வகையிலும் ருமேனியா ஜேர்மனிக்கு தேவைப்பட்டது. சோவியத் ஜேர்மனியப் போர்முனையில் ருமேனியத் துருப்புகள் பெரும் அளவில் நின்றன.

அமெரிக்க, குறிப்பாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளும் ருமேனியா மற்றும் பால்கன் நாடுகளின் விடயமாக தமது விசேட திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தனர். இங்கே செஞ்சேனை வருவதற்கு முன் பால்கனைக் கைப்பற்றி இப்பிரதேசத்தில் ஜனநாயகச் சக்திகளின் வெற்றிக்கு

டபடி கொம்பாசை எப்படிக் குலுக்கினாலும் அதன் முள் வட திசையைக் காட்டுவதுபோல் பிரிட்டிஷ் போர்த் தந்திர முள் எப்போதும் பால்கனை நோக்கி இருந்தது. தனது பால்கன் திட்டத்தை நிறைவேற்ற வி.சர்ச்சில் பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கத் துருப்புகளை மட்டுமின்றி துருக்கியத் துருப்புகளையும் பயன்படுத்த எண்ணினார். *பிரிட்டிஷ்-அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் இத்திட்டங்களில் பால்கன் நாடுகளின்*

மாற்றப்பட்டன. பெந்தேரி மற்றும் அக்கெர்மான் நகரங்கள் கோட்டைகளாக்கப்பட்டன. தினேஸ்தர், புரூட் மற்றும் சேரெத் ஆறுகளின் மேற்குக் கரைகளில் எதிரி உறுதியான தற்காப்பு நிலைகளை அமைத்தான்.

2-வது, 3-வது உக்ரேனிய சேனைகளுக்கு எதிராக தெற்கு உக்ரேன் என்ற பாசிசப் படைத் தொகுதி தற்காப்பில் நின்றது. இதில் வேலெர் ஆர்மித் தொகுதியும் (8-வது ஜேர்மனிய, 4-வது ருமேனியப் படைகள், 17-வது தனி ஜேர்மனிய கோர்பஸ்) துமிற்றோக்கு ஆர்மித் தொகுதியும் (6-வது ஜேர்மனிய, 3-வது ருமேனிய. படைகள்) அடங்கியிருந்தன. மொத்தமாக தெற்கு உக்ரேன் படைத் தொகுதியில்



நேச நாடுகளின் அணிபலப்பட்டபோது ஹிட்லருக்கெதிரான சுவரொட்டி

விட்டமும் இதற்கும் கூடுதலான விட்டமும் உடைய 16 ஆயிரம் சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் (விமான எதிரிப்பு பீரங்கிகளைச் சேர்க்காது) 1870 க்கும் கூடுதலான டாங்கிகள், தானியங்கிப் பீரங்கி அமைப்புகளும் சுமார் 2200 விமானங்களும் (கருங்கடல் கப்பற் படையின் விமானங்களையும் சேர்த்து) இருந்தன. மொத்த படைவீரர்களின் எண்ணிக்கை 12 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் கூடுதலாயிருந்தன.

சோவியத் துருப்புகள் ஆள்பலத்தில் 1.4 மடங்கும் பீரங்கிகளில் 1.2 மடங்கும் டாங்கிகளில் 4.7 மடங்கும் விமானங்களில் 2.7 மடங்கும் எதிரியை விஞ்சி நின்றன.

எதிரியின் யாஸ்ஸி- கிஷினேவ் படைத்திரட்டைச் சுற்றிவளைத்து ஒழிக்கும் நோக்கத்தோடு யாஸ்ஸிக்கு வடமேற்கிலும் பெண்தேரிக்கு தெற்

மல்தாவியாவில் தினேஸ்தர் ஆற்றங்கரையில் இருக்கும் கோட்டை-இது 13ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது-2ம் உலகப்போரின்போது ருமேனியர்களின் வசம் இருந்தது



## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு


நேசநாடுகளின் தலைவர்கள்

*மக்களுக்கு பெரும் அபாயம் அடங்கியிருந்தது.*

தனது தென் பக்கவாட்டில் தற்காப்பிற்கு ஏற்பாடு செய்த பாசிச ஜேர்மனியப் படைத் தலைமை பால்கனை நோக்கிய பாதையை மூடி பாதுகாத்த யாஸ்ஸி-கிஷினேவ் திசைக்குப் பெரும் முக்கியத்துவம் அளித்து இங்கே பெரும் படைத்திரட்டைக் குவித்தது.

இடையூறு விளைவிக்க அவர்கள் முயன்றனர்.

1943 கோடையில் நாங்கள் சிசிலியின் உள்ளும் இத்தாலியின் உள்ளும் புகுந்த பின் பால்கன் நாடுகளை, குறிப்பாக யுகோஸ்லாவியாவைப் பற்றிய சிந்தனை ஒரு நிமிடம் கூட என்னை விட்டு அகலவில்லை என்று பிரிட்டிஷ் பிரதமர் வி.சர்ச்சில் தன் நினைவுக் குறிப்புகளில் எழுதினார். அமெரிக்கப் பத்திரிகையாளர் இன்கெர்சோல் அடையாளச் சிறப்போடு குறிப்பிட்

ஸ்டிராஜா, பஷ்கானி எல்லையிலும் தினேஸ்தர் ஆறு வழியே கருங்கடல் வரையிலும் தற்காப்பில் இருந்த 2-வது, 3-வது உக்ரேனிய சேனைகளின் துருப்புகளின் முன் ஜேர்மனியர்கள் 3 மண்டலங்கள் அடங்கிய, உறுதியான, பல படைவரிசைகளைக் கொண்ட தற்காப்பைத் தோற்றுவித்தனர். தீர்கு-நியாமு, தீர்கு-ஃப்ரூமொஸ், யாஸ்ஸி, ஃபாக் ஷானி நகரங்கள் பலப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக இவர்களால்

47 டிவிசன்களும் (இவற்றில் 25 ஜேர்மனிய டிவிசன்கள், 22 ருமேனிய டிவிசன்கள்) 5 பிரிகேடுகளும் 7600 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 404 டாங்கிகளும் 810 விமானங்களும் இருந்தன. மொத்தமாக எதிரியின் தரப்பில் இருந்த ஆட்களின் எண்ணிக்கை 9இலட்சத்துக்கும் அதிகம் ஆகும்.

2-வது, 3-வது உக்ரேனிய சேனைகளின் (தளபதிகள் மலினோவ்ஸ்கியும் தல்பூகினும்) துருப்புகள் நன்கு சாதனப்படுத்தப்பட்ட நிலைகளில் நின்றன. இரு சேனைகளிலும் 90 டிவிசன்கள், 6டாங்கி மற்றும் இயந்திரப் படைக் கோர்பஸ்கள், ஏராளமான பீரங்கிப்படை, பொறியியல் மற்ற விசேட யூனிட்டுகள், படைப் பிரிவுகள் ஆகியன இருந்தன. சேனைகளின்வசம் 76 மி.மீ.

கேயும் உள்ள பிரதேசங்களிலிருந்து, 2-வது, 3-வது உக்ரேனிய சேனைகளின் சக்திகளைக்கொண்டு ஒன்றிணையும் திசைகளில் இரண்டு பலத்த தாக்குதல்களைத் தொடுப்பது என்பதுதான் யாஸ்ஸி- கிஷினேவ் நடவடிக்கையில் உயர்மட்ட பிரதான படைத்தலைமையகத்தின் திட்டமாயிருந்தது. இதையடுத்து இரண்டு

ருமேனிய விடுதலைப்படைஅதிகாரிகள்




சேனைகளும் ஃபாக்ஷானி, காலத்ஸ், இஸ்மயீலை நோக்கி முன்னேற வேண்டும்.

(தொடரும்)

# வடக்கு இராணுவத்தினரை வெளியேற்ற முடியாது

## கத்திக்குளறிய மஹிந்த



(கொழும்பு)

வடக்கில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்றக்கோருவது நியாயமற்றது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியக்குழுவினரிடம் ஆவேசமாக தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் தமிழர்களின் நிலை குறித்து ஆராய வந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்று முன்தினம் காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

இதன்போது வடக்கில் இருந்து இராணுவம் வெளியேறுவதையே அங்குள்ள மக்கள் விரும்புவதாக இந்தியக்குழுவினர் எடுத்துக் கூறினர். அதற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மறுப்புத் தெரிவித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

நாடு முழுவதிலும்தான் நாங்கள் படைகளை நிறுத்தியுள்ளோம். வடக்கில் நிலைகொண்டுள்ள துருப்புக்களை வெளியேற்றுவது சாத்தியமாக இருக்கப்போவதில்லை.

அவர்களை அங்கிருந்து வெளியேற்றி இந்தியாவுக்கா அனுப்ப முடியும்? என்று இந்தியக்குழுவினரைப் பார்த்து ஆவேசமாக கேள்வி எழுப்பியுள்ளார் ஜனாதிபதி.

குறிக்கப்பட்ட இடங்களில்தான் படையினர் தளம் அமைத்துள்ளனர். அவர்கள் ஒன்றும் வெளிநாட்டு மண்ணில் நிறுத்தப்படவில்லை. இலங்கையில் தான் நிலைகொண்டுள்ளனர்.

போர் முடிந்தபின்னர் வடக்கு, கிழக்கில் முன்னர் இராணுவத்தினர் வசம் இருந்த பெருமளவு பகுதிகளை விடுவித்துள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# விக்ரோரிய மாநிலத்தில் தமிழீழ தேசியக்கொடி



அவுஸ்திரேலிய - விக்ரோரிய மாநிலத்தின் கீலோங் நகரத் தொழிற்சங்க கூட்டமைப்பின் அலுவலகக் கட்டடத்தில் தமிழீழத் தேசியக்கொடி உத்தியோகபூர்வமாக ஏற்றி வைக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை தொழிற்சங்க கூட்டமைப்பில் பொதுச் செயலாளர் ரிம் குளோறொண்ட் தமிழீழத் தேசியக் கொடியை அலு வலகக் கட்டட உச்சியில் ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அவுஸ்திரேலிய வெள்ளை இன மக்கள் கரவொலி எழுப்பித் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். கொடியேற்றுதலுக்கு முன்னதாக தமிழீழத் தேசியக்கொடி உருவான வரலாற்றுப் பின்னணி குறித்தும் தேசியக் கொடி குறித்தும் அங்கு கூடியிருந்த மக்களுக்கு சபேசன் எடுத்துரைத்தார்.

நிகழ்வின் இறுதியில் சனல் 4 இன் இலங்கையின் கொலைக்களங்கள் விவரணப்படம் திரையிடப்பட்டது.

இவ் விபரணப் படத்தை பார்த்து கவலையுற்ற பார்வையாளரின் கேள்விகளுக்கு சபேசன் பதிலளித்தார். (அ-2)

# இயக்கச்சியில் 20 பயனாளிகளுக்கு இரண்டு இலட்சம் ரூபா பகிர்ந்தளிப்பு

ஆனையிறவு இராணுவ தடைமுகாமை அண்டிய பிரதேசமாக தொடர்ந்து பல ஆண்டுகளாக பாதிப்புக்குள்ளாகிய பிரதேசமாக இயக்கச்சியினுடைய கிராமங்கள் இருந்து வருகின்றன.

பெருமளவான மக்கள் இங்கு கடற்றொழிலில் ஈடுபடுகின்றவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

அண்மையில் கோவில் வயல் சங்கத்தார் வயல்போன்ற கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்த பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனிடம் இப்பகுதிக் கடற்றொழிலாளர்கள் அமைப்பு வேண்டிக்கொண்ட தற்கமைய கனடா வாழவைப்போம் அமைப்பு இத்தொழிலாளர்களுக்கு உதவியாக 2 இலட்சத்தை வழங்கியிருந்தது.

இந்த நிதியைப் பயனாளியிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் சங்கத்தார் வயல் பொதுநோக்கு மண்டபத்தில் அப்பகுதிக் கடற்றொழிலாளர் சங்கத்தலைவர் ரவீந் திரன் தலைமையில் நடைபெற்றது.

கனடா வாழவைப்போம் வழங்கிய தலா ஒவ்வொருக்குமான 10 ஆயிரம் ரூபா பணத்தை 20 பயனாளிகளுக்கு வழங்கிவைத்து பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கருத்துத் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் பழம் பெரும் கிராமங்களான இக்கிராமங்களின் மக்கள் தாமும் வாழ்ந்து பிறருக்கும் உதவி செய்கின்றவர்களாக வாழ்ந்த வாழ்வைக் கொண்டவர்கள். ஆனால் இன்று திட்டமிட்டு தமிழ்மக்கள்மீது நடத்தப்பட்ட போரால் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். (அ-2)

# இந்திய எம்.பி.க்கள் குழு எமது அமைப்பை சந்திக்காதது ஏன்?

## காணாமல் போனோரை தேடியறியும் குழு கேள்வி

(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு இலங்கை வந்த இந்திய எம்.பி.க்கள் குழு எம்மை ஏன் சந்திக்கவில்லை என்று காணாமற்போனோரை தேடியறியும் குழு கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் அவ்வமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காணாமல் போனோர் தொடர்பான விடயமே தமிழ் மக்களை வாட்டி வதைக்கும் மிகப்பெரிய பிரச்சினையாக இன்று உருவெடுத்துள்ளது.

எந்தவொரு தூதுக்குழுவினரிடமும் மக்கள் அதனையே கேட்கின்றனர். தற்போது இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய நாடாளுமன்றக் குழுவிடமும் காணாமல் போன தமது உறவுகளையே அம் மக்கள் கேட்டுள்ளனர்.

காணாமல் போனோரை தேடியறியும் குழு காணாமல் போனவர்கள் தொடர்பாக பல போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. எம்மிடம் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காணாமல் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் உள்ளன.

இந்திய எம்.பி.க்கள் குழு எமது அமைப்புடன் இந்த விடயம் தொடர்பாக எதுவித கலந்துரையாடலையும் நடத்த முன்வராதது எமக்கு வியப்பை அளிக்கின்றது.

தமிழ் மக்களின் துயரங்கள் என்ன என்று அறிவதற்காகவே தாம் இலங்கை வந்ததாக இந்திய நாடாளுமன்ற குழுவினர் தெரிவித்திருந்தனர்.

உண்மையில் தமிழ் மக்களின் விடயங்களில் இந்தத் தூதுக் குழுவிற்கு அதிக அக்கறை இருக்குமானால் அவர்கள் எமது அமைப்புடன் ஏனைய மனித உரிமை அமைப்புக்களையும் அழைத்து சந்திப்பை ஏற்படுத்தியிருப்பார்கள்.

ஆனால் அவர்கள் அதனைச் செய்யவில்லை. எனவே வழமை போன்று இலங்கை அரசாங்கத்தை காப்பாற்றும் முயற்சியாகவே இந்த தூதுக்குழுவின் வருகையும் நடந்துள்ளது என்பதாகவே நாம் எண்ண வேண்டியுள்ளது என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படாமைக்கு ஐ.தே.க.வும் கூட்டமைப்புமே பொறுப்பு

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படாமைக்குத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் பொறுப்பை ஏற்கவேண்டுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் தீர்வுத் திட்ட பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளத் தவறியுள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பிரபல வார இறுதிப்பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் குறித்த கட்சிகள் உரிய பதில் அளிக்கத் தவறியுள்ளன. 13 ஆம் திருத்தச்சட்டம் அமுல்படுத்தப்படவேண்டுமென இந்தியா கட்டாயப்படுத்தவில்லை.

தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினை ஏற்றுக்கொள்ளமுடியாது. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்கவேண்டியது அவசியமானது.

ஹிலாரி கிளின்டனிடமோ அல்லது எஸ்.எம். கிருஸ்ணாவிடமோ தெரிவிப்பதன்மூலம் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. கடத்தல்கள், காணாமல் போதல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை ஊடகங்கள் அரசாங்கம் மீது சுமத்தி வருகின்றன. எவரேனும் மறைந்து கொண்டால் யாரேனும் காணாமல் போனால் அவரைக் கடத்தியது அரசாங்கம்தான் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக அரசாங்கம் முஸ்லிம் ஒருவரை நியமிக்கத் திட்டமிட்டுள்ளதாக வெளியாகிவரும் செய்திகள் வெறும் வதந்தியே என தெரிவித்துள்ளார். (அ-2)



சுன்னாகம் பொலிஸாரின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட சித்திரைப் புதுவருட விளையாட்டு விழா அண்மையில் ஏழாலை மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கரப்பந்தாட்ட அணிகளுக்கான அறிமுக நிகழ்வை சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜி.டி.ஆர் கங்கநாத் ஆரம்பித்து வைப்பதையும் கரப்பந்தாட்ட நிகழ்வையும் கரப்பந்தாட்டத்தில் வெற்றியீட்டிய கோட்டைக்காடு நியூவோறியல் விளையாட்டு கழகத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் வெற்றிக்கிண்ணம் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

# சுஷ்மா, ராஜபக்ஷவை தனியே சந்தித்ததன் நோக்கம் என்ன?

## கேள்வி எழுப்புகிறார் திருமா



(கொழும்பு)

இலங்கை சென்ற இந்திய நாடாளுமன்றக் குழு தலைவி சுஷ்மா சுவராஜ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தனிமையில் சந்தித்தமையானது உலகத் தமிழர்களிடையே ஐயத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு தொல். திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் செல்கின்ற இந்தக் குழுவில் இடம்பெற்றவை தமிழினத்தின் மீது அக்கறையோ தமிழீழ விடுதலையில் உடன்பாடோ இல்லாத கட்சிகள் என்றும் இப்பயணத்தால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் விளையப்போவதில்லை என்றும் பெரும்பான்மையின் மக்களை சமாதானப்படுத்துவதற்காகத்தான் இக்குழு செல்கின்றது என்றும் விடுதலைச் சிறுத்தைகள் கூறினோம். அதனை உறுதிப்படுத்தும் வகையில்தான் இக்குழுவின் பயணம் அமைந்துள்ளது.

சுஷ்மா சுவராஜ், ராஜபக்ஷவை தனிமையில் சந்தித்துப் பேசியிருக்கிறார். இது குழுவில் உள்ள பிற உறுப்பினர்களை அவமதிக்கும் செயலாகும். இந்தியாவின் பிரதமர் அல்லது வெளிவிவகாரத்துறை அமைச்சர் போன்ற பொறுப்புக்களில் உள்ளவர்கள் இவ்வாறு தனிமையில் சந்திப்பதை ஏற்கலாம். ஆனால் இவர் எந்த அதிகாரத்தின் அடிப்படையில் ராஜபக்ஷவைத் தனிமையில் சந்தித்தார் என்ற கேள்வி எழுகிறது.

அத்துடன் செய்தியாளர்கள் சந்திப்பின் போது ஒன்றுபட்ட இலங்கையைத்தான் இந்தியா ஆதரிக்கும் என்று அவர் கூறியிருக்கிறார். இதுவும் அவரது அதிகார வரம்பை மீறிய செயலாகும்.

எதிர்க்கட்சித் தலைவரான இவர் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை தொடர்பாக எந்த அடிப்படையில் கருத்துச் சொல்கிறார்? இவ்வாறு கருத்துச் சொல்ல இந்தியாவின் பிரதமர் அல்லது குடியரசுத் தலைவர் இவருக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறார்களா?

இப்போக்கை விடுதலைச் சிறுத்தைகள் வன்மையாகக் கண்டிக்கிறது என அதில் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# கட்சி ஒழுக்க விதிகளை ஒரு போதும் மீறமாட்டேன்


## அமைச்சர் மேர்வின்

(கொழும்பு)

கட்சி ஒழுக்க விதிகளை ஒரு போதும் மீறிச் செயற்பட மாட்டேன் என மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒழுக்க விதிகளை உரிய முறையில் பேணும் கட்சியாகும். பெலியத்த பகுதியிலிருந்து வந்த நான் கட்சி விதிகளை மீறமாட்டேன். ஒழுக்காற்று விசாரணை தொடர்பில் கட்சிசிரேஷ்டவத்திற்கு சவால் விடுக்கவில்லை. ஒழுக்காற்று குழுவினரின் விசாரணைகளுக்கு சவால் விடுக்கும் வகையில் கருத்து வெளியிட்டதாக ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்ட செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை. தேவையானவை தேவையான நேரத்தில் நடைபெறும். இதில் எவ்வித மாற்றமும் கிடையாது என தெரிவித்துள்ளார். (அ-2)



மாங்குளம் சந்தியிலிருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்த டிப்பர் வாகனம் ஒன்று பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக விபத்துக்குள்ளாகிய நிலையில் சரிந்து விழுந்து கிடப்பதைப் படத்தில் காணலாம்.
(படம்:-மல்லாவிச் செய்தியாளர்)




★ 1343-எஸ்தோனியாவில் ஜேர்மனியர்களுக்கெதிரான கலவரங்களில் ஆயிரத்து 800 ஜேர்மனியர்கள் உயிரிழந்தனர்.

★ 1635-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது அரசுப் பள்ளி, பொஸ்டன் இலத்தீன் பள்ளி மாசுசெட்ஸ் மாநிலத்தில் பொஸ்டன் நகரில் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1639-புனித ஜார்ஜ் கோட்டை மதராசில் கட்டப்பட்டது.

★ 1660-சுவீடன் மற்றும் போலந்து ஆகியவற்றிற்கிடையில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டது.

★ 1867-சக்கரம் ஒன்றில் படங்களை செருகி தொடர் படமாகக் காட்டக்கூடிய சோயிட்ரோப் (Zoetrope) என்ற கருவிக்கான காப்புரிமத்தை வில்லியம் லிங்கன் என்பவர் பெற்றார்.

★ 1896-நியூயோர்க் நகரில் உள்ள புகழ் பெற்ற கோஸ்டர் அண்ட் பயால்ஸ் மண்டபத்தில் வாட்வில்லி குழுவினரால் இரண்டு அழகிகள் குடை நாட்டியம் ஆடுவது போன்ற காட்சி காண்பிக்கப்பட்டது. இதுதான் விட்டாஸ்கோப் என்ற ஆரம்பகால திரைப்படம் காட்டும் கருவி மூலம் திரையில் காண்பிக்கப்பட்ட முதல் காட்சி ஆகும்.

★ 1905-யாழ்ப்பாணத்திற்கு முதன் முதலில் தானுந்து கொண்டு வரப்பட்டது.

★ 1932-நெதர்லாந்தில் 153 ஆண்டுகள் பழைமையான டி ஆட்ரியான் என்ற காற்றாலை தீயில் எரிந்து அழிந்தது.

★ 1940-மிசிசிப்பியில் நாட்செஸ் என்ற இடத்தில் இரவு விடுதி ஒன்று தீப்பற்றியதில் 198 பேர் உயிரிழந்தனர்.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் முப்படைகள் தாக்குதலை ஆரம்பிக்க முன்னர் கிரேக்க மன்னர் இரண்டாம் ஏதன்ஸ் நகரை விட்டு வெளியேறினார்.

★ 1948-அரபு- இஸ்ரேல் போர் : இஸ்ரேலின் முக்கிய துறைமுகம் ஹைஃபா பாலஸ்தீனர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டது.

★ 1966-முதலாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் நிறைவடைந்தது.

★ 1982-கொங்க் குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1984-எயிட்ஸ் வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1987-ஐக்கிய அமெரிக்காவின் கொனெக்டிகட் மாநிலத்தில் பிரிட்ஜ்போர்ட் என்ற இடத்தில் கட்டடம் ஒன்று இடிந்து விழ்ந்ததில் 28 கட்டடத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

★ 1990-நமீபியா அரசியல் மற்றும் பொது நலவாய நாடுகள் அமைப்புகளில் சேர்க்கப்பட்டது.

★ 1993-இந்திய அரசியல் கட்சி இந்திய தேசிய லீக் உருவானது.

★ 1993-எரித்திரியாவில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் எதியோப்பியாவில் இருந்து பிரிவதற்கு எரித்திரியர்கள் பெரும் அளவில் ஆதரவாக வாக்களித்தனர்.

★ 1997- அல்ஜீரியாவில் ஓமாரியா என்ற இடத்தில் 42 கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1971-ஜேம்ஸ் பியூக்கானன், ஐக்கிய அமெரிக்காவின் 15 ஆவது ஜனாதிபதி (இ.1868)

★ 1858-மாக்ஸ் பிளாங், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய இயற்பியலாளர் (இ.1947)

★ 1867-ஜொகான்னெஸ் ஃபிபிகர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1928)

★ 1897-லெஸ்டர் பியர்சன், நோபல் பரிசு பெற்ற கனேடிய பிரதமர்(இ.1972)

★ 1902-ஹால்டோர் லாக்ஸ்னெஸ், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (இ.1998)

★ 1935-இ.முருகையன் ஈழத்து கவிஞர் (இ.2009)

★ 1977-கால் பெண் குஜராத்தி அமெரிக்க நடிகர்

### இறப்புக்கள்

★ 1616-வில்லியம் ஷேக்ஸ்பியர், ஆங்கில நாடக எழுத்தாளர் (பி.1564)

★ 1951-சார்ல்ஸ் டோவ்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1865)

★ 1992-சத்யஜித் ராய், உலகப் புகழ் பெற்ற திரைப்பட இயக்குநர்(பி.1921)

★ 1993-லலித் அத்துலத்முதலி இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் (பி.1942)

★ 2007-போரிஸ் யெல்ட்சின் முன்னாள் ரஷ்ய ஜனாதிபதி (பி.1931)


★ 2009-ரூபராணி ஜோசப் இலங்கை மலையகப் பெண் எழுத்தாளர்.



★ 1938-தென்னிந்தியத் திரைப்படப் பின்னணிப் பாடகி எஸ்.ஜானகியின் பிறந்த தினம்

# வால் அறுந்த நரிகள் ஊளையிடுகின்றன

சின்னஞ்சிறிய சுண்டைக்காய் இன்றைக்கு இந்தியாவை மிரட்ட ஆரம்பித்திருக்கிறது. ஆம், ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் முன்பு தலைகுனிந்த இலங்கை அரசு இன்றைக்கு இந்தியாவிற்கு எதிராக அவதூறுகளையும் பொய்யுரைகளையும் பொழியத் தொடங்கியிருக்கிறது. காரணம் அதன் ஈழத்துப் படுகொலைகளுக்கு எதிராக இந்தியாவும் வாக்களித்ததால். அதனால் இலங்கை அரசு கோபத்தில் தீக்குளித்துக் கொண்டிருக்கிறது. ஒரு வகையில் இந்திய அரசு மீது இலங்கை அரச சீற்றம் கொள்வது நியாயம்தான். ஆரம்ப காலம் தொட்டு ஈழத்து அழிவிற்கு கரம் கொடுத்த உமக்கு இன்றைக்கு எப்படி ஞானம் பிறந்தது என்று இலங்கை குமுறுகிறது.



விடுதலைப்புலிகளுக்கு தமிழகத்தில் பயிற்சி அளிக்கப்படுவதாக சென்ற வாரம் இலங்கை புனைந்துரைத்தது. அப்படி பயிற்சி பெற்றவர்கள் ஈழத்தில் அடியெடுத்து வைத்துவிட்டனர் என்றும் கதை அளந்து இத்தகைய கடைந்தெடுத்த கற்பனைகளை அதன் உளவுத்துறையே பிரபல நாளேடுகளில் விதைக்கிறது. இது அம்பலமாகிவட்டது. இப்போது அதன் கற்பனைப் புலி இந்தியாவைப் பிராண்டிப் பார்க்கிறது.

இங்கே கூடங்குளம் எதிர்ப்பாளர்கள் பயன்படுத்திய ஆயுதத்தை இப்போது இலங்கை அரசு தூக்க ஆரம்பித்திருக்கிறது. கூடங்குளம் அணுமின் நிலையத்தில் விபத்து ஏற்பட்டால் அதனால் இலங்கையும் பாதிக்கப்படும். மன்னார் மாவட்டமும் தங்கள் வடமேற்குக் கடலோரப் பகுதியும் கதிர்வீச்சிற்கு உள்ளாகும். அப்படி ஏற்பட்டால் அதற்கு இழப்பீடு உண்டா? இவை போன்ற பிரச்சினைகளைப் பேசித்தீர்க்க வேண்டும். அதற்கு இந்தியா எங்களோடு உடன்பாடு காணவேண்டும் என்று இலங்கை அரசின் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

**நக்கீரன்**

கூடங்குளம் அணுமின் திட்டத்தை இலங்கை எதிர்க்கும் என்று இன்னொரு மேதாவி தெரிவித்திருக்கிறார். அவர்தான் இலங்கை அரசின் சுற்றுச்சூழல் நிதிச்செயல் இயக்குனர் ஹேமந்வித்தாகே. கூடங்குளம் இலங்கையை பாதிக்கும். எனவே அதை மூட வேண்டும் என்று சர்வதேச அணுசக்தி முகாமையிடம் முறையிட வேண்டும் என்று கொழும்பு ஆங்கில நாளேடுகள் ஜனதிபதிக்கு அறிவுரை கூறுகின்றன.

சேது சமுத்திரத்திட்டத்தை ஆரம்பம் முதலே சீர்குலைக்க இலங்கை அரசு முயன்று வருகிறது. அதன் பின்னணி தெரியாது இங்கேயுள்ள சிலர் அதற்கு துணைபோகிறார்கள்.

கூடங்குளம் ஆணுமின் நிலையத்தைத் திடீரென்று எதிர்க்கின்ற இலங்கை அரசு அப்படி ஒரு மின் நிலையத்தைத் தங்கள் மண்ணில் நிறுவாதா? அதற்கு சீனத்தின் உதவியைக் கோரியிருக்கிறதா? இல்லையா?

ரஷ்யாவில் செர்னோபில் அணுமின் நிலையம் விபத்துக்குள்ளானது. நாற்பதாண்டு கால பழமையான அந்த நிலையத்தின் இயந்திரங்களை மாற்றாமலே புதிய உற்பத்திமுறைகளை ஆராய்ந்தனர். விபத்து ஏற்பட்டது. அதனால், அணுமின் நிலையங்களை ரஷ்யா மூடிவிடவில்லை. தற்போது 23 அயிரத்து 200 மெகாவாட் அணுமின் சாரத்தை உற்பத்தி செய்கிறது. இன்னும் 8 ஆண்டுகளில் 43 ஆயிரத்து 300 மெகாவாட் அணுமின்சாரம் உற்பத்தி செய்யத் திட்டமிட்டிருக்கிறது. அதற்காக புதிதாக 20 அணுமின்நிலையங்களை அமைக்கிறது. ககாலினின் என்ற இடத்தில் நான்காவது அணுமின் நிலையம் தற்போது செயற்படத் தொடங்கியிருக்கிறது.


செர்னோபில் அணுமின் உலை விபத்துக்குப்பின்னர் இத்தாலி அதன் உலைகளை மூடியது. அவைகள் பழமையானவை. தற்போது புதிதாக இத்தாலி- அல்பேனிய எல்லையில் புதிய அணுமின் நிலையம் அமைத்து வருகிறது.

ஏற்கனவே குறிப்பிட்டது போல பிரான்சு நாட்டின் மொத்த மின்சாரத் தேவையில் 70 சத விகிதத்தை அணு உலைகள்தான் உற்பத்தி செய்து தருகின்றன. இத்தனைக்கும் அந்த நாடு கத்தோலிக்க கிறிஸ்துவத்தை ஏற்றுக் கொண்ட நாடு. இங்கே போர்க்கோலம் பூணும் பாதிரியார்கள் பாரிஸ் சென்று பார்த்து வரவேண்டும்.

ஜப்பானின் புகுஷிமா அணுஉலை விபத்துக்குப்பின்னர்தான் “ஐயோ உலகம் அழியப்போகிறது” என்று ஆர்ப்பரிக்கிறார்கள். அந்த உலை தமது ஆயுட்காலத்தை நெருங்கியிருந்தது.

புகுஷிமாவிற்கு அருகில் டொகோகூ அணு மின்நிலையம் செயற்படுகிறது. நவீன தொழில்நுட்பத்தில் உருவான அந்த நிலையம் முறையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. அதனால், அந்த அணு உலை விபத்துக்கு உள்ளாகவில்லை. ஏன்? நமது கல்பாக்கம் அணுமின் நிலையம் எத்தனை புயல்களை, ஆழிப்பேரலைகளை சந்தித்திருக்கிறது. அவையெல்லாவற்றையும் எட்டி உதைத்துவிட்டுக் கம்பீரமாய் நிற்கிறது.

சீனம் புதிதாக 20 அணுமின் நிலையங்களை அமைக்கிறது. இந்தியா 40 அணுமின் நிலையங்களை அமைக்கத் திட்டமிட்டிருக்கிறது. வியட்நாமிற்கு ரஷ்யாவும் ஜப்பானும் ஐந்து அணுமின் உலைகளை அமைத்துத் தருகின்றன. ஈரானின் முதல் அணுமின்நிலையம் புஷ்ஷர் என்ற நகருக்கு அருகே செயற்படத் தொடங்கியிருக்கிறது.



தென்கொரியாவின் மின்சாரத் தேவையில் 30 சதவிகிதத்தை அணுமின் உலைகள்தான் உற்பத்தி செய்து தருகின்றன. 30 சதவிகிதத்தை 60 சதவிகிதமாக உயர்த்துவதற்கு புதிதாக 20 அணுமின் உலைகள் அமைக்கத் திட்டமிட்டிருக்கிறது.

இன்றைக்கு 30 நாட்களில் 423 அணுமின் உலைகள் முப்பது ஆண்டுகளுக்கு மேலாகச் செயற்படுகின்றன. இந்தியாவில் சிறியதும் பெரியதுமாக 20 அணுமின் நிலையங்கள் செயற்படுகின்றன. செர்னோபிலும் புகுஷிமாவும் மட்டும் மனிதத் தவறுகளால் விபத்துக்கு உள்ளாகின.

வடகொரிய கடற்பகுதியை ஒட்டித்தான் தென்கொரிய அணுமின் நிலையங்கள் இயங்குகின்றன. “ஐயோ! விபத்து ஏற்பட்டால் என்ன கொடுப்பாய்” என்று வடகொரியா தென்கொரியாவின் மடியைப் பிடித்துக் கொண்டிருக்கவில்லை. தமது எல்லையில் இத்தாலி அணுமின் நிலையம் அமைப்பதை அல்பேனியர் எதிர்க்கவில்லை.

இத்தனை ஆண்டுகளாக கூடங்குளம் உருவாகி வருவதை இலங்கை அரசு பார்த்துக்கொண்டுதான் இருந்தது. அப்போதெல்லாம் அந்த அரசு எதிர்ப்புத் தரிவிக்கவில்லை இப்போது ஏன் குதியாட்டம் போடுகிறது. சர்வதேச மன்றத்தில் இனப்படு கொலைக்கு அழியாத சாட்சியாக இரத்தக்கறை படிந்த கரங்களோடு நிர்வாணமாக நின்றுகொண்டிருக்கிறது. அதன் மானத்தைக்காக்க இந்தியா உதவவில்லையே என்ற ஆத்திரத்தில் முட்டி மோதிப்பார்க்கிறது. அதன் மானத்தைக்காக்க முயற்சித்தால் இந்தியாவும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கும். எனவே வாலறுந்த நரிகள் ஊளையிடுகின்றன.

ஒரு பக்கம் புத்தரின் மகிமை பேசிக்கொணடு (விடுதலை) புலிக்கறியும் ஈழத்துப்பிள்ளைக் கறியும் சாப்பிடுகின்ற பேரினவாதிகளால் காந்திசிலையை கண்கொண்டு பார்க்க முடியுமா? அதனால் தான் உடைத்துப் போட்டுவிட்டார்கள்.

இன்றைக்கு சீனத்தின் உதவியோடு இலங்கை இரண்டு துறை முகங்களைக் கட்டி வருகிறது. அந்தத் துறைமுகங்களை அவசியப்பட்டால் கப்பற்படைத்தளங்களாக உருமாற்ற முடியும் என்கிறார்கள். அப்படியானால் அந்தத் துறைமுகங்கள் எந்த நாட்டிற்கு எதராகப் பயன்படுத்தப்படும்? தமிழகத்திற்கே அச்சுறுத்தலாக இருக்கும். இந்தியாவிற்கு எதிராகப் பயன்படுத்துகின்ற வாய்ப்புக்கள்தான் அதிகம் இருக்கின்றன. எனவே, அந்தத் துறைமுகங்களை மூட வேண்டும் என்று இந்தியா கோருமானால் அதில் தவறில்லை.

# வலிகாமம் கிழக்கு பகுதி மக்களுக்கான அடிப்படை வசதிகள் கிடைக்கவில்லை

## இந்தியக் குழுவினர் ஊடாக மன்மோகனுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு மூன்று வருடங்களுக்கு பின்பும் வலிகாமம் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 253 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 30 பேர் நலன்புரி முகாம்களில் தங்கியுள்ளதாக குறிப்பிட்டு வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தலைவர் அ. உதயகுமார் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட இந்திய நாடாளுமன்றக் குழு ஊடாக பிரதமர் மன்மோகனுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் இடம் பெயர்வுக்கு முன்னர் ஏறத்தாழ 20 வருடங்களுக்கு முன் 25 ஆயிரம் குடும்பங்கள் வசித்து வந்தன.

நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக ஒட்டுமொத்த குடும்பங்களும் இடம்பெயர்ந்து மாவட்டத்தின் வேறு பல இடங்களிலும் மாவட்டத்திற்கு வெளியேயும் அகதிகளாக வாழ்ந்து வந்தன.

போர்ச்சூழல் ஒழிந்து மக்கள் படிப்படியாக மீளக்குடியேற ஆரம்பித்துள்ளனர்.

தற்பொழுது வளலாய் வடக்கில் ஒரு பகுதியும் இடைக்காடு பகுதியும் இராணுவத்தால் விடுவிக்கப்பட்டு மீள்குடியேற்றம் இடம் பெற்று வருகின்றது.

அதாவது ஜே/284 வளலாய் கிராம சேவையாளர் பிரிவில் 129 குடும்பங்களைச் சேர்ந்த 446 பேரும் ஜே/283 இடைக்காடு கிராம சேவையாளர் பிரிவில் 201 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 666 பேரும் மீளக்குடியேற்றப்பட்டுள்ளனர்.

ஆனால் அங்கு மிதிவெடிகள் பூரணமாக அகற்றப்படாததால் எந்தவொரு மக்களும் தங்களின் காணிகளுக்கு செல்வதற்கு இயலாத நிலையுள்ளது.

இந்தப் பகுதியில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் எவையும் உரிய முறையில் செய்து கொடுக்கப்படாமையால் மக்கள் அவதியுறுகின்றனர்.

சுகாதாரம், வாழ்வாதாரம், வீட்டு வசதிகள், குடிநீர் வசதிகள், மலசலகூட வசதிகள், போக்குவரத்து வசதிகள், சிறார்களுக்கான கல்வி கற்றல் வசதிகள் எவையும் சரியான முறையில் செய்து கொடுக்கப்படாமல் மக்களை நிர்க்கதியான நிலைக்குள் தள்ளியதே அரசின் மீள்குடியேற்றமாகும்.

இவை மட்டுமல்ல எமது பகுதியில் நலன்புரி நிலையங்களில் 253 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 30 பேரும் தனியார் வீடுகளில் ஆயிரத்து 632 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 361 பேரும் எதுவித வசதிகளுமின்றி வாழ்ந்து வருகின்றனர்.

தற்பொழுது அச்சுவேலி வளலாய் (ஜே/284) வடக்கு பகுதியில் ஒருபகுதி பெரும் விவசாய நிலத்தை கொண்டது. அப்பகுதி இப்பொழுதும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே மீளக்குடியேற்றப்பட்ட குடும்பங்களின் சகல அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன் என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-6)

## தனியார் பேருந்து ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கை

உரிய நடைமுறைகளுக்கு மாறாக போக்குவரத்து அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டதை கண்டித்து இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக களுத்துறை, கொழும்பு தனியார் பஸ் ஊழியர்கள் சங்கப் பிரதிநிதி அஜித் பிரியந்த தெரிவித்துள்ளார்.

குறித்த போக்குவரத்து அனுமதிப்பத் திரம் இரத்துச் செய்யப்படும் வரை பணிப் பகிஷ்கரிப்பு தொடரும் என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேல் மாகாண போக்குவரத்து அமைச்சர் உபாலி கொடிகாரவிடம் வினவியபோது, குறித்த போக்குவரத் அனுமதிப்பத்திரம் புத்தாண்டு பண்டிகை காலத்தை முன்னிட்டு தற்காலிகமாக வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடுவதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## 150 ஏக்கர் நெற்காணியில் சிறுபோக பயிர்செய்கை

(பூநகரி)

பூநகரிப் பிரதேசத்தில் புதிதாக புனர் நிர்மாண வேலைகள் செய்யப்பட்ட குடமுருட்டக்குளம் நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் இம்முறையும் 150 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கான கூட்டம் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசம் தலைமையில் முக்கொம்பன் பாடசாலை மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

மேற்படி திட்டச்சிறுபோகச் செய்கைக்கு நிரந்தர வாசிகளுக்கு 3/4 ஏக்கரும் ஏனையவர்களுக்கு 1/2 ஏக்கர் நீர்ப்பங்கும் வழங்கப்படவுள்ளன.

மேலும் இந்நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் சின்னப்பல்லவராயன் கட்டு கமவெளியிலும் நல்லாயன் கமவெளியிலும் 275 பயனாளிகள் தற்போது சிறுபோகச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 9 ஆவது பெரியகுளம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர், மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர், பூநகரி கமநல சேவை அலுவலர் உட்பட கமக்கார அமைப்புப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (அ-9-84)

## காணி அமைச்சர் ஜனக இலஞ்சம் பெற்றுவிட்டார்

### பிக்கு குற்றச்சாட்டு

இலங்கையின் காணி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் இலஞ்சம் பெற்றுக் கொண்டுள்ளதாக மிக முக்கியமான பௌத்த பிக்கு ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தம்புள்ள பிரதேசத்தில் இஸ்லாமிய பள்ளிவாசல் ஒன்றை அமைப்பதற்கு காணி அமைச்சர் இலஞ்சம் பெற்றுக் கொண்டு அனுமதி வழங்கியுள்ளதாக ரன்கிரி தம்புள்ள விஹாரையின் பீடாதிபதி இனாமலுவே ஸ்ரீ சுமங்கல தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

குறித்த பள்ளிவாசலை இடிக்குமாறு அண்மைக்காலமாக தம்புள்ளையில் நடைபெற்று வரும் போராட்டங்களுக்கு சுமங்கல தேரர் தலைமை தாங்கி வருகின்றார். இதே வேளை இந்தக் குற்றச்சாட்டு அபாண்டமானது என அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

சுமங்கல தேரரின் குற்றச்சாட்டுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடர உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான குற்றச்சாட்டுக்களை சுமத்துவோருக்கு இடி விழும் என அமைச்சர் சாபம் விடுத்துள்ளார். (அ-2)


## மன்னராட்சிக் காலத்தை பிரதிபலிக்கும் அருங்காட்சியகம்

இலங்கையில் மன்னராட்சி காலத்தை பிரதி பலிக்கும் புதிய அருங்காட்சியகமொன்றை அமைப்பதற்கு தொல்பெருள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கண்டியிலுள்ள பழைமையான அரண்மனை ஒன்றில் புதிய அருங்காட்சியகம் அமைக்கப்பட வுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் கலாநிதி செனரத் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த அருங்காட்சியகத்தில் விஜயன் தொடக்கம் ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன் வரையான மன்னர்களின் வரலாற்றை சித்தரிக்கும் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

புதிய அருங்காட்சியகத்தை இந்த வருட இறுதியில் திறந்து வைக்க திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)




பூநகரி பிரதேச பனை அபிவிருத்தி சபையினால் பனை உற்பத்திப் பொருள் பயிற்சி நிறைவு விழாவும் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் பூநகரிப் பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ஆர்.கேதீஸ்வரன் கண்காட்சியைத் திறந்து வைப்பதையும் விருந்தினர்கள் கண்காட்சியை பார்வையிடுவதையும் பயிற்சியை நிறைவு செய்த ஒருவருக்கு பிரதம விருந்தினர் சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பூநகரிச் செய்தியாளர்)




# சுதந்திரம் மனிதர்களுக்கு மட்டுமல்ல!

## அம்புலி மாமா கதைகள்



இரண்டாம் வகுப்பில் படித்து வந்த ரகு மிகவும் புத்திசாலி! புத்திசாலித்தனத்துடன் நல்ல மனமும், நற்பண்புகளும் படைத்தவன்! சிறு வயது முதலே அவனுக்கு இயற்கை மீது பற்றுதல் அதிகம். வானில் தவழும் மேகங்களையும், பூத்துக் குலுங்கும் மலர்ச் செடிகளையும், பறவைகளின் இனிய கீதத்தையும் மிகவும் ரசிப்பவன்! மிருகங்கள், பறவைகள் ஆகியவற்றின் மீது அலாதிப் பிரியம் அவனுக்கு உண்டு! ஒரு நாள் தன் தாயிடம், அம்மா! நமக்கு பேசும் சக்தியை கொடுத்த கடவுள், மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் அந்த சக்தியை ஏன் தரவில்லை? என்று கேட்டான்.



அப்படியில்லை ரகு! கடவுள் அவற்றுக்கும் குரல் கொடுத்திருக்கிறார். அவற்றின் மொழி நமக்கு புரிவதில்லை. அவ்வளவுதான்! என்றாள். ஒருநாள் ரகு பாடசாலையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கையில் சாலையோரத்தில் ஒரு கிளி காயமடைந்து கீழே விழுந்திருப்பதை கண்டான். அருகில் சென்று பார்த்தவுடன், அதன் காலில் அடிபட்டு விழுந்திருந்ததை அறிந்தான். அதன் நிலையை கண்டு மனமிரங்கிய ரகு அதற்கு உதவி செய்ய அணுகிய போது, அது பயத்தினால் பின் வாங்கியது.

உடனே அவன் அதைப் பார்த்து, கிளியே! என்னைப் பார்த்து பயப்பட வேண்டாம். உனக்கு உதவி செய்யவே நான் வந்துள்ளேன். உன்னை என் வீட்டிற்கு அழைத்துச் சென்று, சிகிச்சை அளிப்பேன். நீ குணமானதும் உன்னைப் பழையபடி சுதந்திரமாக பறக்க அனுமதிப்பேன்! என்றான்.

அவன் சொன்னதன் பொருளை உணர்ந்து கொண்டதால் தானோ, என்னவோ! அவன் அதை கையிலெடுத்துத் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்ற போது, கிளி தப்பிக்க முயலவில்லை.

வீட்டையடைந்த ரகு, தன் பெற்றோரின் உதவியுடன் கிளியின் காயத்திற்கு கட்டுப் போட்டு, உணவும் அளித்தான்.பின்னர் அதை ஒரு கூண்டில் அடைத்து தன் தோட்டத்திலிருந்த ஒரு மரத்தின் கிளையில் தொங்க விட்டான்.

வாரத்தில் குணமாகி விட்டது. அதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்த ரகு, தான் கிளிக்கு தந்த ஒரு வாக்குறுதியை மட்டும் மறந்து விட்டான். அதை விடுதலை செய்யவில்லை. கூண்டிலேயே வைத்து அதனுடன் தினமும் விளையாடிப் பொழுது போக்கினான். இவ்வாறு ஓராண்டு காலஞ்சென்றது.

எந்த தினத்தன்று அவன் கிளியை வீட்டிற்கு கொண்டு வந்தானோ, அதற்குப் பின் ஓராண்டு ஆகிவிட்டதையறிந்த ரகு, அந்த தினத்தை கிளியின் பிறந்த தினமாக கொண்டாட விரும்பினான். தன்னுடைய விருப்பத்தை பெற்றோருக்கு தெரிவித்த போது, அவர்களும் அதற்கு சம்மதித்தனர். பிறந்த தினத்தை விமரிசையாகக் கொண்டாட விரும்பிய ரகு, அன்றைய தினம் தன் நண்பர்களை வீட்டுக்கு அழைத்தான். கூண்டில் பல சரிகைக் காகிதங்களையும், வண்ணப் பூக்களையும் பொருத்தி அழகு செய்தான். கிளி உண்ண பல விதமான பழங்களை ஏற்பாடு செய்தான்.

நண்பர்கள் புடை சூழ பிறந்த தின விழா நன்கு நடந்து முடிந்தது. ஆனால் விழாவின் முக்கிய விருந்தாளியான கிளி மட்டும் சோகமாக இருந்தது.



கிளியின் சோகத்திற்கு காரணமறியாத ரகு அதைப் பற்றி சிந்தித்துக் கொண்டே நண்பகலிலேயே தூங்கிப் போனான். ரகு! நீ யாருக்காக இந்த பிறந்த தின விழா ஏற்பாடு செய்தாய்? எதற்காக செய்தாய்? என்று கிளி அவன் கனவில் தோன்றி கேள்வி கேட்டது.

உனக்காகத்தான் என்றான் ரகு. அதன் நோக்கம் என்ன? உன் னுடைய மகிழ்ச்சிக்காகவா அல்லது என்னுடைய மகிழ்ச்சிக்காகவா? ரகு! ஏனெனில் நீ எனக்கு அளித்த வாக்குறுதியை மறந்து விட்டாய்! என்னை சுதந்திரமாக வானில் பறக்க விடாமல் பிறந்த நாளன்று என்னைக் கூண்டில் அடைத்து வைத்து விட்டாய். கூண்டில் அடைப்பட்ட நான் எவ்வாறு மகிழ்ச்சியாக இருக்க முடியும்? என்று கேட்டது.

அப்போது கனவு கலைந்தது. திடுக்கிட்டு எழுந்த ரகு நேராக கூண்டை நோக்கிச் சென்றான். நடுங்கும் கரங்களுடன் கூண்டின் கதவை திறந்தான். உடனே, கிளி கூண்டை விட்டு வெளியே வந்தது. தன் சிறகுகளைப் படபடவென அடித்துக் கொண்டு உற்சாகத்துடன் பறந்து சென்று மரத்தில் அமர்ந்தது. தான் பெற்ற சுதந்திரத்தைக் கொண்டாட மட்டற்ற மகிழ்ச்சியுடன் குரலெடுத்துக் கூவ, பல கிளிகள் பறந்து அங்கு வந்து சேர்ந்தன.

அவை அனைத்தும் தங்கள் தோழனின் உற்சாகத்தில் பங்கேற்றன. கிளிகளின் கூக்குரல் கேட்டு ரகுவின் பெற்றோரும், நண்பர்களும் அங்கு வந்தனர். ரகுவின் தாய் அவனை நோக்கி, ரகு! இப்போது நீ செய்தது தான் மிகச் சரியானது. உன்னுடைய செல்லக் கிளிக்கு நீ அளித்த மிகச் சிறந்த பிறந்தநாள் பரிசு இதுதான்! சுதந்திரம் பெற்ற கிளியின் முகத்தில் தெரியும் ஆனந்தத்தைப் பார்!

சுதந்திரம் நம் போன்ற மனிதர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து ஜீவராசிகளுக்கும் தேவை! பாரதக் கலாசாரமும் இதைத் தான் வலியுறுத்துகிறது. ஒரு புறாவிற்காகத் தன் உயிரையே தர முன் வந்த சிபிச் சக்கரவர்த்தி வாழ்ந்த நாடு பாரதம்! நீ பாரதத்தை நேசிப்பது உண்மையானால், சிபிச்சக்கரவர்த்தி போன்றவர்களின் அடிச் சுவடுகளைப் பின்பற்றி நடக்க வேண்டும்! என்றாள். ஆம்! நான் பாரதத்தை நேசிக்கிறேன்! என்றான் ரகு!

# பொன்னின் பெருமையைப் போற்றிடும் சிறப்புமிகு அட்சய திருதிகைத் திருநாள்

ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் வரும் வளர்பிறைத் திருதிகைத் திதியை அட்சய திருதிகைத் திருநாளாக எம்மக்கள் பொன்னின் பெருமையைப் பெரிதும் வரவேற்றுக் கொண்டாடுகின்றார்கள். இந்த நாளிலே சிறிதளவாயினும் தங்கமோ, வெள்ளியோ வாங்கி னால் அது வாழ்வில் நிறைவையும் மகிழ்வையும் மேன்மேலும் செல்வச் சிறப்புக்களையும் தரும் என நம்புகின்றார்கள்.

அட்சய என்பது அள்ள அள்ளக் குறையாதது என்பார்கள். இதன் சிறப்பைப் பற்றிக் கூறும் பொழுது தேவலோகத்திலே நடைபெற்ற ருத்திர கல்யாணப் பெருவிழாவிலே முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் விருந்து வழங்குவதற்காக அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரத்தை அரியும் சிவனும் சேர்ந்து படைத்து அரி சிவசொரூபமாக இல்லை என்னாது எல்லோருக்கும் விருந்தளித்துப் பெருமகிழ்வுற்றதாகவும் அட்சய திருத்திகை நன்நாளிலே மண்ணுலகத்தவரும் இத்தகைய நல்ல அறப்பணியைக் குறைவின்றிச் செய்து மகிழவே பொன்னின் பெருமையைப் போற்றி எடுத்துக் காட்டப்படுகின்றது.

பொன்னில் மயங்கும் மண்ணுலக மக்கட்குப் பொன்னின் பெருமையைச் சொல்லியே இந்த நல்லநாளில் எந்தவொரு நற்காரியங்கள் செய்தாலும் அது நிறைவாகவும் நல்ல பலன் தருவதாகவும் அமையும் எனவும் தான, தர்மங்கள் செய்தாற் பூவுலகில் நிறைந்த நல்வாழ்வு கிடைக்கும் எனவும் உணர்த்தப்படுகின்றது.

அட்சய திருதிகை நன்நாளிலே பாரதத்தின் புனித நதியாகிய கங்கை சொர்க்கத்திலிருந்து மண்ணுலகம் வந்ததாகவும் இந்து இதிகாசங்களின் படி திரேதாயுகம் ஆரம்பமானதாகவும் மகா விஷ்ணுவின் அவதாரமான பரசுராமர் அவதரித்ததாகவும் விஷ்ணு பகவானின் சிறப்பான கண்களாகவும் தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்த போது காமதேனுவும் கற்பக விருட்சமும் இந்த நன்நாளிலேயே தோன்றியதாகவும் புராணங்கள் சிறப்பாகக் கூறுகின்றன.

மேலும் மிகவும் ஏழ்மையில் வாடிய குசேலர் கண்ணபிரானை சந்தித்துத் தன்னிடமிருந்த ஒருபிடி அவலை அவருக்குக் கொடுத்த போது அதனை உண்ட கண்ணன் அட்சய அட்சய எனக் கூறி மகிழவும் குசேலரின் குடிசை குபேர சம்பத்துடன் செல்வச்சிறப்பு மிகு மாளிகையானது. அன்றைய நாள் அட்சய திருதிகைத் தினமாகும்.

பல்வேறு சிறப்புக்கள் கொண்ட இந்த நன்நாளிலே மக்கள் நல்லனசெய்வதே நல்வாழ்வு வாழ வழி என்பதனை மனதிருத்தி அட்சய திருதிகை நன்நாள் நாம் வாழ்வில் நமக்கு அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என்பதைச் சிறப்பாக எடுத்துக்காட்டுவதனை உணர்ந்து பிறர்க்கும் உணரவைத்து நல்லனசெய்வதால் நாமும் நலம் பெற்று நானிலமும் நலம் கொழிக்க உறுதி கொள்வோம்.

*-நீர்வைமணி-*

# வவுனியா பாடசாலைகளுக்கு இடையில் பெருவிளையாட்டு

(பூந்தோட்டம்)

வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு ஆகிய இரு வலயங்களில் இருந்தும் வலய மட்டப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைக்கு இடையிலான மாவட்ட மட்ட பெரு விளையாட்டுப் போட்டிகள் நாளை மறுதினம் புதன்கிழமை முதன் மே மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளதாக வவுனியா தெற்கு வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். சுபைர் தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் புதன்கிழமை ஆண், பெண் அணிகளுக்கான எல்லே போட்டி வவுனியா நகரசபை மைதானத்திலும் மறுநாள் வியாழக்கிழமை ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டி வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறும்.

பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி வவுனியா நகரசபை மைதானத்திலும் எதிர்வரும் 27ஆம் திதி வெள்ளிக்கிழமை 15, 17, 19 ஆகிய வயதுப் பிரிவுப் பெண்களுக் கான வலைப்பந்தாட்டப்போட்டிசைவப்பிரகாசமகளிர்கல்லூரிமைதானத்திலும் இடம்பெறும்.

எதிர்வரும்30ஆம்திகதிதிங்கட்கிழமைஆண்,பெண்அணிகளுக்கான கபடிப் போட்டி வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத் திலும் எதிர்வரும் மேமாதம் 2ஆம் திகதி 17, 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி நெளுக்குளம் கலை மகள் மகா வித்தியாலய மைதானத்திலும் நடைபெறும்.

எதிர்வரும் 3ஆம் திகதி 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கும் 19 வயதுப்பிரிவு பெண்களுக்குமான உதைபந்தாட்டப் போட்டி நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய மைதானத்திலும் மறுநாள் வெள்ளிக்கிழமை ஆண், பெண் அணிகளுக்கான பூப்பந்தாட்டப் போட்டி வவுனியா நகரசபை மைதானத்திலும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை ஆண், பெண் அணிகளுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டி வவுனியா நகரசபை மைதானத்திலும் நடைபெறும்.

எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆண், பெண் அணிகளுக்கான செஸ் போட்டி வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மைதானத்திலும் மறுநாள் புதன்கிழமை ஆண், பெண் அணிகளுக்கான கரப்பந்தாட்டப் போட்டி வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மைதானத்திலும் இடம்பெறும்.

எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை ஆண், பெண் அணிகளுக்கான மேசைப்பந்து, கரம் ஆகிய போட்டிகள் சூடுவெந்தபுலவு அல் இக்பால் முஸ்லிம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-2-266)

# ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் வருடாந்தம் வெளியிடப்படும் பசுந்துளிர் நூலுக்கான ஆக்கங்களை பளை பிரதேசத்தை வதிவிடமாக கொண்டவர்கள் அனுப்பி வைக்க முடியுமென பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் உதவி அரசாங்க அதிபர் சி.சத்திய சீலன் அறிவித்துள்ளார்.

நூலுக்கான ஆக்கங்கள் பளைப் பிரதேசத்தின் கலை, பண்பாட்டுக் கூறுகளையும், தொன்மை, வரலாறு தொடர்பான ஆதாரபூர்வமான தகவல்களையும் பிரதிபலிப்பவையாக இருக்க வேண்டும்.

சிறுகதை, கவிதை முதலிய ஆக்கங்களை அனுப்புபவர்கள் ஆக்கத்தின் மூலத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டும்.

ஆக்கங்களை முத்திரை அளவான தமது புகைப்படத்துடன் எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

(அ)

YAALH ENGLISH ACADEMY
(077 3212 711)
வழங்கும் இன்றைய தேவை
BASIC+INTERMEDIATE+ADVANCED
PRACTICAL ENGLISH COURSES
FOR ADULTS+ SCHOOL STUDENTS
True ease in Language Use
comes from Proper Practice,
not chance
As they walk with grace,
who've learned to dance!
கற்க. கற்பவை கற்க. கற்பவை, கசடறக் கற்க.
(8169)
வகுப்பிட அனுசரணை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி: யாழ்நகர்

# வர்ணம் தீட்டும் போட்டி

புத்தூர் வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு புதுவருடத்தினை முன்னிட்டு சிறுவர்களுக்கிடையே நூலக பாவனைகளை அதிகரிப்பதுடன் சிறுவர் களின் அறிவு விருத்திக்கு அத்திவாராமாக திகழும் நூலக அபிவிருத்தியினை நோக்கமாகக் கொண்ட வர்ணம் தீட்டும் போட்டி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புத்தூர் பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ள இப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புகின்ற மாணவர்களை நாளை மறுதினம் புதன்கிழமைக்கு முன்னதாக புத்தூர் பொது நூலகத்தில் தங்கள் பதிவுகளை செய்து கொள்ளுமாறு புத்தூர் வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.உதயகுமார் தெரிவித்துள்ளார். (அ-9)

# முஸ்லிம் நாடுகளின் ஆதரவை இலங்கை இழக்க நேரிடும்

(கொழும்பு)

இலங்கை முஸ்லிம் நாடுகளின் ஆதரவினை இழக்க நேரிடக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

தம்புள்ள கண்டலம் பள்ளிவாசல் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தம்புள்ளவில் நேற்றைய தினம் இடம்பெற்ற சம்பவம் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டு மக்களுக்கு போதியளவு பாதுகாப்பை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் மக்களுக்கு போதியளவு பாதுகாப்பை வழங்கத் தவறினால் மக்கள் மாற்று வழிகளில் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ள முனைப்பு காட்டுவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் சுதந்திரமாக மத வழிபாடுகளில் ஈடுபடக் கூடிய உரிமையை அரசாங்கம் உறுதிப்படுத்தத் தவறியுள்ளதாக அவர் வருத்தம் வெளியிட்டுள்ளார்.

(அ-2)


அட்ஷய திருதியை தங்கத் திருவிழா.....
எதிர்வரும் (24.04.2012) செவ்வாய்க்கிழமை தங்கம் வாங்குவதற்கு சிறந்த நாள்.
ஐஸ்வர்யம் நிறைந்த தங்கத் திருநாளில் தங்க நகைகளை வாங்கித் தங்க ஐஸ்வர்யம் உங்களுடன் நிலைத்திருக்க இன்றே நாடுங்கள்.....

(சி-6423)
சிறி மதனா
நகை மாளிகை
அன்று கொள்வனவு செய்பவர்களுக்கு பெறுமதிமிக்க அன்பளிப்புக்கள் வழங்கப்படும்.
155/M, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே:-021 222 7772
கிளை நிறுவனம்
மதனா ஜுவல்லரி
177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 5526


# ஈழத்தமிழர்கள் மீதான படுகொலையை பார்த்தும் பிரிட்டன் அமைதி காப்பது ஏன்?

## தமிழீழ மக்கள் பேரவை கேள்வி

(கொழும்பு)

தமிழனத்தின் இனப்படுகொலையை பார்த்தும் அமைதி காக்கும் பிரித்தானிய அரசிடம் அமைதி காப்பதற்கான காரணம் என்ன என்று கேள்வி கேட்கும் ஒன்று கூடல் பிரித்தானிய தூதரகத்திற்கு அருகாமையில் நாளை மறுதினம் மாலை மூன்று மணிக்கு பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவையால் ஒழுங்கு செய்யப்படுகின்றது.

1833ஆம்ஆண்டுக்குமுன்இலங்கை3இராச்சியங்கள் கொண்ட நாடாக எல்லா இன மக்களும் சுதந்திரமாக வாழும் நாடாக இருந்தது.

ஆங்கிலேய காலனித்துவத்திற்கு முன் சுதந்திர இனங்கள் ஆக வாழ்ந்த நாட்டை ஒரே இராச்சியத்திற்குள் கொண்டு வந்து அதன் பின் டொனமூர் யாப்பில் தமிழ் மக்களை தேசிய இனமற்றவர்களாக்கி சோல்பரி யாப்பின் மூலம் சிங்கள அரசிடம் தமிழர்களின் உரிமைகளை கையளித்து விட்டு சென்று விட்டனர்.

தமிழர்களை இரண்டாம் பிரஜைகளாக்கி விட்டு சென்று பிரித்தானியா அன்று தொடக்கம் இன்று வரை நடைபெற்று வரும் இனப்படுகொலைக்கு மூல காரணமாக இருக்கின்றது. காலனித்துவ ஆட்சியினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் முக்கியமாக இலங்கை இன்று நிற்கின்றது.

கொமன்வெல்த் நாடுகள் என்ற அமைப்பில் அங்கத்துவ நாடாக இருக்கும் காலத்தில் ஆகட்டும் இன்று முள்ளிவாய்க்காலில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களை படுகொலை செய்த இலங்கை அரசை கொமன் வெல்த் நாடுகள் என்ற அமைப்பில் வைத்திருப்பது இலங்கையின் இனப்படுகொலைகளை ஆதரிப்பது போல் இருக்கிறது.

ஆகவே, காலனித்துவ ஆட்சியாளர் என்ற அடிப்படையில் பிரித்தானிய அரசுக்கும் தமிழர்களின் உரிமைகளை பாதுகாப்பதில் காலம் கடந்தாலும் இன்றும் அவர்களுக்கு முக்கிய கடமை தமது கடந்த கால தவறுகளை ஏற்றுக் கொண்டு தமிழர்களின் கையில் அவர்களில் வாழ்வுரிமைகளை மீள் அளிப்பதில் பிரித்தானிய முக்கிய பங்கு அழிக்க வேண்டும்.

அதேநேரத்தில் குற்றவாளி நாடாகிய இலங்கை வெளியேற்ற வேண்டிய கடமை யும் பிரித்தானியாவிடம் உள்ளது. தமிழீழ உறவுகளே! ஒன்று கூடுவோம் நாம் அனைவரும் பிரித்தானிய தூதரகத்திற்கு அருகாமையில் ஓங்கி ஒலிக்கும் எம்மவர்களின் ஒவ்வொரு குரலும் எம் இனத்தை அழிவுக்கு உட்படுத்திய வரை குற்றவாளிக் கூண்டில் ஏற்றும். (அ-2)

## பேருந்துகள் மோதி 11 பேர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதி மயிலம்பாவெளியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பஸ் விபத்தில் 11 பேர் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பிலிருந்து புல்லுமலை நோக்கி பயணித்த இ.போ.ச பஸ்ஸும் மூதூரிலிருந்து கல்முனை நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் மேற்படி விபத்து இடம் பெற்றுள்ளது. (அ-2)

## அம்பாந்தோட்டையில் வாகன இறக்குமதி விலைகளில் அதிகரிப்பு ஏற்படும் சாத்தியம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் புதிதாக அமைக்கப்பட்ட துறைமுகத்தில் வாகனங்களை இறக்குமதி செய்யும் திட்டத்தினால் வாகனங்களின் விலை மேலும் உயர்வடையக் கூடும் என தெரிவிக்கப்படுகிறது.

வாகன இறக்குமதியாளர்களுக்கு மேலதிக செலவு ஏற்படுவதாகவும் இதனால் இந்த செலவுகளை ஈடுசெய்ய வாகன விலைகளை உயர்த்த நேரிடும் எனவும் இலங்கையின் முன்னணி வாகன இறக்குமதி நிறுவனங்களில் ஒன்றான ஏசோசியேட் மோட்டர்வேஸ் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

அம்பாந்தோட்டையிலிருந்து குறித்த வாகனங்களை கொழும்பிற்கு எடுத்துச் செல்ல கார் கரியர் என்னும் விசேட வாகனம் பயன்படுத்தப்படும்.

இந்த வாகனத்தின் மூலம் வாகனங்களை போக்குவரத்து செய்வதற்கு 25 ஆயிரம் வரை செலவாகின்றது. இந்த மேலதிக செலவு வாகன கொள்வனவாளர்களிடமிருந்து அறவீடு செய்யப்படவுள்ளது. இதனால் வாகனங்களுக்கான விலை மேலும் உயர்வடையும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை , வரி அதிகரிப்பு தொடர்பில் அறிவிக்கப்பட்டதனை தொடர்ந்து வாகனங்கள் தொடர்பில் நுகர்வோரினால் விடுக்கப்படும் கோரிக்கைகள் 90 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (அ-2)

## உணவகங்கள் தரச்சான்றிதழ் பெற்றிருப்பது மிக அவசியம்

(மல்லாவி)

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய சுற்றுப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களின் உரியையாளர்கள், பணியாளர்கள் என 60 இற்கும் மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி திருமுறிகண்டி பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர் செ.அரவிந்தன் தலைமையில் நடைபெற்றது.

மேற்குறிப்பிட்ட பகுதியில் உள்ள சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் உணவகங்கள் மீது கடமையாற்றும் ஊழியர்கள், உரிமையாளர்கள் சுகாதார சீர்கேடுகளாக இயங்கிய உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் அனைத்தும் தரச்சான்றிதழ் பெறக்கூடிய நிலையில் மாற்றியமைக்கப்படவேண்டும்.

இவ்வாறு மாற்றியமைக்கப்படாத உணவகங்கள் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதோடு A, B, C தரச் சான்றிதழ்கள் வழங்கப்படமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு அங்கு கடமையாற்றும் பணியாளர்கள் தனிநபர் சுகாதார நடவடிக்கைகளை கடுமையாக கடைப்பிடிக்க வேண்டும் எனவும் சீருடையுடனும் மற்றும் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். மலசல கூடங்கள்நவீன முறையில் அமைக்கப்பட வேண்டும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளனர். (அ-3-15)

## வடமராட்சி கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்திலுள்ள தரம் 1ஏபி பாடசாலைகளான யா/விக்னேஸ்வரா கல்லூரி, யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி ஆகியவற்றில் விரைவில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார்.

இதற்கு விண்ணப்பிப்பவர்கள் இலங்கை அதிபர் சேவையிலுள்ளவர்களும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு1 வகுப்பு 2.1 ஐச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் பயிற்றப்பட்ட பட்டதாரிகள் அல்லது பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுடன் கூடிய பட்டதாரிகளும் அல்லது அதற்கு மேற்பட்ட தகைமைகளை கொண்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து ஆகக் குறைந்தது மூன்று வருடங்களேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லையை கொண்டவராகவிருத்தல் வேண்டும்.

அதிபர் சேவையை சேர்ந்தவர்களாயின் தற்போது கடமையாற்றும்பாடசாலையில் 3 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு, தரம் என்பவற்றின் வரிசைப்படி முன்னுரிமை அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரிகள், விண்ணப்பப்படிவங்களை வலயக் கல்வி அலுவலக நிர்வாக கிளையில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் மே மாதம் 5அம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ தமது வலயத்திற்கு அனுப்பி வைக்குமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ-2)

## காலாவதியான பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளன



வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட கோப்பாய், புத்தூர், சிறுப்பிட்டி பொதுச்சுகாதார பரிசோதகர் பகுதிகளில் அமைந்துள்ள பலசரக்குக்கடைகளில் விற்பனை செய்யப்படுகின்ற உணவுப் பண்டங்கள் சிலவற்றின் காலாவதித் திகதிகள் முடிந்த நிலையில் அவை கைப்பற்றி அழிக்கப்பட்டுள்ளன. மேற்படி பிரதேச சபைக்குட்பட்ட 15 பலசரக்கு கடைகளில் காலாவதித் திகதி முடிந்த நிலையில் வைத்திருந்த உணவுப்பொருட்கள் கைப்பற்றி அண்மையில் வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி , பொதுச் சுகாதார பரிசோதகர்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டன.

பொது மக்களின் சுகாதார நிலைகளை பாதிக்கும் இவ்வாறான வியாபாரிகள் மீது எதிர்காலத்தில் கடுமையான சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படுமென எச்சரிக்கப்பட்டதோடு பொதுமக்களையும் விழிப்புடன் செயற்படுமாறும் தெரிவிக்கப்பட்டது. (அ-9)

## பளைப்பகுதியை சேர்ந்த 29 குடும்பங்களுக்கு உதவிகள்

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பளைப்பகுதியை சேர்ந்த 29 வறிய குடும்பத்தினருக்கு இன்று முற்பகல் 11 மணியளவில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கிளிநொச்சி அமைப்பாளரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளருமான திருமதி கீதாஞ்சலி நகுலேஸ்வரன் தனது சொந்த நிதியிலிருந்து இந்த வறிய குடும்பங்களுக்குரிய வாழ்வாதார உதவிகளை வழங்குகின்றார்.

முதற்கட்டமாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட பெண்களை தலைமைத்துவமாக கொண்ட 29 குடும்பங்களுக்கு அப்பகுதியை சேர்ந்த கிராம சேவையாளர்கள் மற்றும் மாதர் சங்கங்களின் சிபாரிசுகளின் அடிப்படையில் இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன. (அ-6)

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.
~ கோம்பு தஸன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்ற இந்தியாவின் உதவியை நாடிய அமெரிக்கா

## விக்கிலீக்ஸ் தகவல்

இடம்பெயர் மக்களை மீள்குடியேற்ற அமெரிக்கா, இந்தியாவின் உதவியை நாடியது என விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது. யுத்தவலயத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்களை மீள்குடியேற்ற வேண்டுமென இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா அழுத்தம் கொடுக்குமாறு அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளிண்டன் கோரியுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தினால் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட தகவலில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இடம்பெயர் மக்களை மீள்குடியேற்றுவது மனிதாபிமான விடயம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா ஹிலாரியிடம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் 180 நாட்களுக்குள் மொத்த இடம்பெயர் மக்களையும் இலங்கை அரசாங்கத்தினால் மீள்குடியேற்ற முடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

குறிப்பாகப் பருவப்பெயர்ச்சி மழை மற்றும் நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தியாகாமை போன்ற காரணிகளினால் இடம்பெயர் மக்களை மீள்குடியேற்றுவது உரிய காலத்திற்குள் முடியுமா என்பது சந்தேகமே என அவர் தெரிவித்துள்ளார் என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (அ-2)

# தமிழக முதல்வர் ஜெயலலிதாவை கூட்டமைப்பு அவசரமாகச் சந்திக்க வேண்டும்

செய்வோம்.... செய்வோம் இப்படிக் கூறியே செத்துமடிந்தவர்கள் ஏராளம். செத்துமடிவதற்கு முன் செய்திருந்தால் எத்தனையோ சாவுகளை தடுத்திருக்கமுடியும்.

இந்த யதார்த்தம் உலகம் முழுவதற்கும் பொருத்துடையதாயினும் எங்கள் விடயத்தில் இது மிகப் பொருத்துடையதாகிவிட்டது.

காலத்திற்குக் காலம் ஆட்சிப்பீடத்தில் இருந்தவர்கள் அனைவரும் ஏதோவொரு வகையில் இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காலம்கடத்தி வந்துள்ளனர்.

இவ்வாறு காலம்கடத்துவதன் மூலம் அவர்கள் இந்த நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றுள்ளனர்.

இப்போது கூட வன்னி யுத்தத்திற்குப் பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றவர்கள் அதுபற்றி எதுவும் சிந்திக்காதவர்களாக உள்ளனர்.

ஜெனிவாத் தீர்மானம், இந்தியக்குழுவின் இலங்கை விஜயம் இதனைத் தொடர்ந்து எதிர்வரும் மேமாதம் 18ஆம் திகதி அமைச்சர் பீரிஸுக்கும் கிலாரி கிளின்டனுக்கும் இடையில் நடைபெறவுள்ள சந்திப்பு என்று நிலைமைகள் நகர்வடைந்தாலும், 'தீர்வு' பற்றிய நினைப்பு இலங்கை அரசிடம் அறவே இல்லை என்றே கூறவேண்டும்.

இவ்வாறான அரசின் நிலைப்பாட்டிற்கு, தமிழ்த் தரப்புக்களின் இராஜதந்திரமற்ற செயற்பாடுகளும் ஏமாந்து, போகின்ற தன்மைகளும் காரணமாகின்றன என்றே கூறவேண்டும்.

ஜெனிவாத் தீர்மானத்தில் இந்திய மத்திய அரசு இலங்கைக்கு எதிராக வாக்களித்தமைக்கு யார் என்ன காரணம் கூறினாலும்,

தமிழகத்தில் எழுந்த கொந்தளிப்பே இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கக் காரணமாயிற்று.

இலங்கைக்கு விஜயம் செய்த சுஷ்மா சுவராஜ் ஈழத்தமிழர்கள் மீது கொண்ட கரிசனை காரணமாகவே ஜெனிவாத் தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது என்றார்.

ஆனால் ஜெனிவாத் தீர்மானத்திற்கு முன்னதாக இந்திய நாடாளுமன்றத்தில் பேசிய அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு எதிரான ஜெனிவாத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க முடியாதென்றார்.

ஆக இறுதிவரை ஜெனிவாத் தீர்மானத்தில் இலங்கை அரசின் பக்கம் நின்ற இந்தியா, தமிழகத்தில் எழுந்த கொந்தளிப்பு – அங்குள்ள அரசியல் தலைமைகள் ஒன்றுபட்டு ஒரேகுரலில் எழுப்பிய கோஷம்,

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் இறுக்கமான போக்கு இவற்றால் அதிர்ந்து போய் தனது முடிபை மாற்றிக் கொண்டு, தீர்மானத்தை ஆதரித்தது.

இந்த உண்மையின் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புத்திசாலித்தனமாக செயற்படுவதாக இருந்தால், இந்தியக் குழுவின் வருகைக்குப் பின்னர் உடனடியாக தமிழகம் சென்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி உட்பட வைகோ, பழ நெடுமாறன், சீமான் ஆகியோரைச் சந்தித்து எங்கள் நிலைமையை எடுத்துக் கூறவேண்டும்.

ஆனால் கூட்டமைப்பு அதுபற்றி சிந்திக்குமா? என்பதுதான் சந்தேகம்.

# சிறந்த கையெழுத்து சஞ்சிகைகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

உலகப் புத்தக தினத்தை முன்னிட்டு யாழ்.பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம் அம்மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் கீழ்ச் செயற்படும் நூலகங்களுடன் இணைந்து யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே கையெழுத்துச் சஞ்சிகைப்போட்டியை நடத்தியது.

இதில் மாவட்ட ரீதியாக மிகச் சிறந்தவையாகத் தெரிவு செய்யப்பட்ட சஞ்சிகையின் விபரங்களை யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ.பிரணவநாதன் அறிவித்துள்ளார்.

பாடசாலை ரீதியாக தெரிவு செய்யப்பட்டவற்றின் விபரம் வருமாறு,

சிறுவர் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட சகல ஆக்கங்களுக்கும் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**கீழ்ப்பிரிவு**

**தூரிகை**
(யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்)

**சுடர்**
(யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்)

**வெண்சங்கு**
(யா/ஏழாலை மகா வித்தியாலயம்)

**பூந்தளிர்**
(யா/ ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

**வானவில்**
(யா/தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம்)

**மத்திய பிரிவு**

**சுபீட்சம்**
(யா/கோப்பாய் மகா வித்தியாலயம்)

**அலைமொழி**
(யா/ மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை)

**தேடல்**
(யா/தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை)

**வளர்பிறை**
(மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்)

**தமிழ்க் கலசம்**
(உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்)

**மேற்பிரிவு**

**இரவி**
(உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**முகிழ்வு**
(பண்டத்தரிப்பு பெண்கள் கல்லூரி)

**உயர்வு**
(மெய்கண்டான் வித்தியாலயம்)

**நீரூற்று**
(செங்குந்தா இந்துக்கல்லூரி)

**துளிர்**
(வேலணை மத்திய கல்லூரி) (அ)

# மதுபோதைக்கு அடிமையானவர்களை திருத்தியெடுக்க புதிய புனர்வாழ்வு முகாம்

## சுகாதார அமைச்சு தீர்மானம்

மதுபோதை, புகைத்தல் பழக்கத்திற்கு அடிமையாகி சீர்கெட்டுள்ள நபர்களுக்கென புதிய புனர்வாழ்வு முகாம் ஒன்றை அமைக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தப் புனர்வாழ்வு முகாமை அமைக்க தீர்மானித்ததாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நீரிழிவு, உயர்குருதி அழுத்தம், இதய நோய், கண்பார்வைக்குறைவு, புற்றுநோய் மற்றும் சுவாசநோய் ஆகியவற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாகவும் இதற்குக் காரணம் மதுபோதை மற்றும் புகைத்தலுக்கு அடிமையாதல் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் கிராமப்பகுதிகளில் வறுமை அதிகரித்துள்ளமைக்குக் காரணம் மது, புகைத்தல்பாவனை அதிகரித்துள்ளமை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இக்கருத்துக்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு மது மற்றும் புகைத்தல் பழக்கத்திற்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்டெடுக்க அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து கொண்டதாக சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## மஹோற்சவம்

மூளாய் வதிரன்புலோ அருள்மிகு சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் மேமாதம் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளதுடன் மகோற்சவ காலத்தில் தினமும் இரவு 7 மணிக்கு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மாவின் மகாபாரதம் எனும் தலைப்பிலான தொடர் இசைப்பேருரையும் நடைபெறும். (அ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உலகத்தைக் காலடியில் வைக்க



பிறருடைய தவறைக் காண முயற்சிக்காமல் உங்களுடைய தவறைத் திருத்திக்கொள்ளுங்கள்.

பொறாமை, ஆணவம் ஆகியவற்றைத் தூக்கி எறிந்துவிட்டு உன் முழுவலிமையுடனும் அளவற்ற ஆர்வத்துடனும் தொழிற்களத்தில் இறங்கினால் இறைவன் நல்வழிகாட்டுவான்.

தெளிந்த உண்மையும் கருத்துத்தூய்மையும் மனிதனுக்கு உறுதியான வெற்றியைத் தரும்.

ஒவ்வொரு உயிரிலும் தெய்வத்தன்மை இருக்கிறது. உள்ளேயும் வெளியேயும் இருக்கும் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி உள்ளத்தில் குடிகொண்டுள்ள தெய்வத்தன்மையை மலரச் செய்வது தான் ஒருவருக்கு இலட்சியமாக இருக்கவேண்டும்.

அனைத்தையும் பொறுப்பவளாக இருக்கும் பூமிதேவியைப் போன்று நீங்களும் பொறுமையுடன் இருந்தால் உலகமே உங்கள் காலடியில் அமரும்.

நம்பிக்கை, உன்னிடம் நம்பிக்கை, கடவுளிடத்தில் நம்பிக்கை. இதுவே வெற்றி பெறுவதன் இரகசியம்.

துன்பப்படுபவர்களுக்கு உதவிசெய்வதன்மூலம் தெய்வீக இயல்பு நம்மிடம் வெளிப்படும்.

# பாகிஸ்தான் விமான விபத்து குறித்து நீதி விசாரணைக்கு கிலானி உத்தரவு



பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் அருகே போஜா ஏர் எனும் விமானம் வெள்ளிக்கிழமை விழுந்து நொறுங்கியதில் 127 பேர் பலியானது தொடர்பாக நீதி விசாரணைக்கு அந்நாட்டுப் பிரதமர் யூசப் ரசா கிலானி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2 ஆண்டுகளில் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள மிக மோசமான இரண்டாவது விமான விபத்தாகும் இது.

போஜா ஏர் நிறுவனத்தின் உரிமையாளரான ஃபரூக் போஜா கைது செய்யப்பட்டுள்ளார். நாட்டை விட்டு வெளியேறக்கூடாது எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே அவரது பெயர் வெளியேறக்கூடாத நபர்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

இஸ்லாமாபாத்தில் உள்ள அரசுக்கு சொந்தமான பி.ஐ.எம்.எஸ் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த பலியானவர்களின் உடல்களைப் பார்வையிட்ட கிலானி செய்தியாளர்களிடம் கூறியதாவது,

விமான விபத்து தொடர்பாக நீதி விசாரணை நடத்தத் தேவையான அனைத்தையும் செய்யுமாறு உள்துறை அமைச்சிடம் கூறியுள்ளேன். இந்த விமான விபத்து மிக மோசமான துயர நிகழ்வாகும்.

புலனாய்வு இல்லாமல் எந்த முடிவுக்கும் நாம் வர முடியாது. விபத்தில் உயிரிழந்த பொரும்பாலானவர்களின் உடல்கள் உரிய உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன என்றார்.

ஃபரூக் போஜாவிடம் விசாரணை நடத்துமாறு பெடரல் புலனாய்வு அமைப்புக்கு உத்தரவிட்டப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு விட்டது. விமான விபத்துக்கு தொழில்நுட்பக் கோளாறுதான் காரணமா என்பது பற்றி விசாரணைக்குப் பிறகே தெரியவரும்.

10 ஆண்டுகளுக்குப்பின்னர் போஜா ஏர் நிறுவனம் மீண்டும் பறக்க அனுமதிக்கப்படுவதற்கு முன் சோதனைக்குட்படுத்தப்பட்டது. தென்னாபிரிக்காவில் உள்ள பாகிஸ்தான் அதிகாரிகளால் சான்றளிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் விமான விபத்து குறித்து விசாரணை நடத்துமாறு விமானப்படை அதிகாரிகளுக்கும் பிரதமர் கிலானி உத்தரவிட்டுள்ளார். இந்த விமானம் தயாரிக்கப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலாகின்றது. நவீன வசதிகள் ஏதும் இல்லாத நிலையில் இது எவ்வாறு அனுமதிக்கப்பட்டது என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளப்படும்.

விழுந்து நொறுங்கிய விமானத்தின் கறுப்புப் பெட்டி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது விரைவில் ஆய்வுக்கு அனுப்பப்படும்.

இந்த விபத்து குறித்து பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானிக்கு பிரதமர் மன்மோகன் சிங் கடிதம் அனுப்பி உள்ளார். இந்த விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு தன் சார்பிலும் இந்திய மக்களின் சார்பிலும் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாக மன்மோகன் சிங் கடிதத்தில் கூறியுள்ளார். (அ-2)

# பிரான்சில் இரண்டு கட்டமாக தேர்தல்



பிரான்ஸ் நாட்டில் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலில் முதல் கட்ட வாக்குப் பதிவு நேற்று நடைபெற்றது.

இந்த தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியாக பதவி வகிக்கும் நிகோலஸ் சர்க்கோசி இரண்டாவது முறையாக மீண்டும் போட்டியிடுகிறார்.

அவருடன் சோசலிஸ்ட் கட்சி வேட்பாளர் பிரான்சுவா ஹோலண்ட் உட்பட 10 பேர் களத்தில் உள்ளனர்.

2 கட்டங்களாக நடைபெறவுள்ள இந்த தேர்தலில் முதல் கட்ட தேர்தலில் அதிகளவு வாக்குகள் பெறும் இரண்டு வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு இரண்டாம் கட்ட தேர்தலுக்கு தகுதியானவர்களாக அறிவிப்பர். இந்த ஜனாதிபதித்தேர்தலில் பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் சுமார் 4 கோடியே 40 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் அனைதுப் பகுதிகளும் இந்திய சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட பின்னரும் புதுச்சேரி மக்கள் பிரான்ஸ் நாட்டுடன் தொடர்பில் இருந்து வருகின்றனர்.

இதனால் இத்தேர்தலில் பிரெஞ் குடியுரிமை பெற்றவர்கள் வாக்களிக்க ஏதுவாக சென்னையில் ஒரு வாக்குச்சாவடியும் புதுச்சேரி மாநிலத் தில் 5 வாக்குச் சாவடி மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

புதுச்சேரி பிரெஞ்ச் தூதரக எல்லைக்குள் அந்நாட்டின் குடியுரிமை பெற்ற 5 ஆயிரத்து 259 வாக்காளர்கள் உள்ளனர்.

இவர்கள் வாக்களிப்பதற்காக புதுச்சேரியில் 4 வாக்குச் சாவடிகளும் காரைக்காலில் ஒரு வாக்குச் சாவடியும் சென்னையில் ஒரு வாக்குச் சாவடியும் அமைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# எரிமலை வெடித்தது; மக்கள் வெளியேற்றம்

மெக்சிக்கோ புறநகர் பகுதியில் அமைந்துள்ள எரிமலையொன்று வெடித்ததில் அப்பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மெக்சிக்கோ தலைநகர் மெக்சிக்கோ சிட்டியின் புறநகர் பகுதியான ஷாலிட் சிந்தியா என்ற கிராமத்திற்கருகே இந்த எரிமலை அமைந் துள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலையில் இந்த எரிமலை வெடிக்கத் தொடங்கியது.

இதைத்தொடர்ந்து அப்பகுதி மக்கள் அச்சம் அடைந்ததையடுத்து மெக்சிக்கோ அரசு 2600 பேரை பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைத்தது. (அ-2)

# பிரிட்டிஷ் ராணிக்கு வயது 86



பிரித்தானிய அரசி இரண்டாம் எலிசபெத் தனது 86 ஆவது பிறந்த தினத்தை குடும்பத்துடன் கொண்டினார்.

ஹைட் பார்க்கிலும் ல்ணடன் டவரிலும் 41 பீரங்கிகள் மூழ்கின. விண்ட்சர் கோட்டையில் அரச குடும்பத்தினர் அவருடன் எளிமையான நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் பார்த்துக் கொண்டிருந்த போது பீரங்கிகள் முழங்கியதால் பீதியடைந்த ஒரு குதிரை தறிகெட்டோடியது. இதனால் நிகழ்ச்சி சில நிமிடங்களுக்குத் தடைப்பட்டது. (அ-2)

# சூழல் மாசுபாட்டினால் டொல்பின்கள் இறப்பு



சுற்றுச்சூழல் மாசுபாட்டினால் சமீப காலமாக ஏராளமான கடல்வாழ் உயிரினங்கள் இறந்து கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் பெரு நாட்டின் கடற்கரை பகுதியில் நூற்றுக் கணக்கான டெல்பின்கள் மரணம் அடைந்து வருகின்றன.

இது குறித்து பெரு நாட்டின் சுற்றுச்சூழல் அமைச்சர் காப்ரியல் குவாங்க்ரியே கூறுகையில்,

டொல்பின்களின் இந்த மர்ம மரணம் குறித்து உறுதியான எந்த தவலும் இல்லை.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை சுமார் 877 டொல்பின்கள் மரணம் அடைந்து பெரு நாட்டின் கடற்கரையில் ஒதுங்கியுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் இதில் 90 சதவீதம் நீண்ட மூக்குடைய டொல்பின்கள் வகை என்றும் மற்றவை பர்மீசிட்டர் போர்போசில் வகை டொல்பின்கள் எனவும் தெரிவித்தார்.

இதற்கு வைரசால் ஏற்படும் ஒரு வகை நோய் காரணமாக இருக்கலாம் என அதிகாரிகள் கருதுகின்றனர். (அ-2)

# அடுத்தாண்டு முதல் தேநீர் இந்தியாவின் தேசிய பானம்

(சென்னை)

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேநீர் இந்தியாவின் தேசிய பானமாக அறிவிக்கப்படும் என திட்டக்குழுத்துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா தெரிவித்துள்ளார்.

அசாம் மாநிலம் ஜோர்கத்தில் நடைபெற்ற தேயிலை உற்பத்தியாளர்களின் 75 ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொண்ட திட்டக்குழு துணைத்தலைவர் கூறுகையில்,

அசாமின் முதல் தேயிலை உற்பத்தியாளரான மணிராம் திவானின் 212 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேநீர் இந்தியாவின் தேசிய பானமாக அறிவிக்கப்படும்.

தேயிலை உற்பத்தியில் ஈடுபடுவர்களில் பெரும்பான்மையானோர் பெண்கள் என்பதும் தேயிலை தேசிய பானமாக அறிவிக்கப்படுவதற்கும் மற்றொரு முக்கிய காரணம்.

பிளக் தேநீர் உற்பத்தி யில் இந்திய உலகளவில் முதலிடத்தில் உள்ளது என்றும் 83 சதவிகித இந்திய குடும்பங்களில் தேநீர் தான் அருந்தப்படுகின்றது என்றும் அலுவாலியா தெரிவித்துள்ளார். (அ-2)

# ஆப்கானில் 10 தொன் எடை கொண்ட வெடிமருந்துப் பொருட்கள் சிக்கின

## தாக்குதல் சம்பவம் முறியடிப்பு

ஆப்கானிஸ்தானில் இராணுவத்தினர் நடத்திய அதிரடி சோதனையில் 10 தொன் எடை கொண்ட வெடிமருந்துப்பொருட்கள் சிக்கயதால் மிகப்பெரிய பயங்கரவாதத் தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டின் தலைநகர் காபூலில் இராணுவத்தினர் நடத்திய வாகனச் சோதனையில் லொறியொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அதிகளவான வெடி பொருட்கள் சிக்கின.


அவற்றை இராணுவத்தினர் கைப்பற்றி விசாரணை நடத்தியதில் ஐந்து பேர் சிக்கினர். அவர்களில் மூவர் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர் என்றும் இருவர் ஆப்கான் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்தது.

மேலும் இந்த வெடி பெருங்களை அவர்கள் ஹக்கானி என்ற பயங்கரவாத அமைப்பிடம் இருந்து பெற்று ஆப்கானுக்கு கடத்தி வந்ததும் அவற்றைக் கொண்டு அந்நாட்டின் துணை ஜனாதிபதி முகமது கலீலைக் கொல்ல பயங்கரவாதிகள் திட்டமிட்டிருந்ததும் தெரியவந்தது.

இது தொடர்பாக சிக்கிய பயங்கரவாதிகளிடம் விசாரணை நடந்து வருகின்றது.

இராணுவத்தினரின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் மிகப் பெரிய பயங்கரவாத தாக்குதல் திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# டெக்கானை 5 விக்கெட்டுகளால் வீழ்த்தியது கொல்கத்தா அணி



ஐ.பி.எல் தொடரின் 29ஆவது லீக் ஆட்டம் ஒரிசா மாநிலம் கட்டாக்கில் உள்ள பார்பதி மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் சங்கக்கார தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

போட்டி தொடங்குவதற்கு முன் மைதானத்தில் மழை பெய்ததால் ஆட்டம் ஒரு மணி நேரம் தாமதமாக தொடங்கியது. அதன் பின் நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணித் தலைவர் காம்பீர் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதனால் டெக்கான் அணி முதலில் துடுப்பாட்டம் செய்யக் களமிறங்கியது.

ஆரம்ப துடுப்பாட்டக்காரர்களாக சங்கக்காரவும் தவானும் களம் இறங்கினார்கள். சங்கக்கார 12 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ஆட்டம் இழந்தார்.

பின்னர் 2-வது விக்கெட்டுக்கு தவானுடன் பார்த்திவ் பட்டேல் ஜோடி சேர்ந்தார்.


பார்தீப் பட்டேலும் 23 ஓட்டங்களில் வீழ்ந்தார்.

இறுதியில் டெக்கான் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது.

127 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொல்கத்தா அணி 19 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக பிரெட் லீ தெரிவானார்.

# பஞ்சாப் 6 விக்கெட்டுகளால் மும்பையை வெற்றிகொண்டது



ஐ.பி.எல் தொடரின் 28-ஆவது லீக் ஆட்டம் மும்பையில் உள்ள வான்கடே மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

நேற்று மாலை 4 மணிக்கு ஆரம்பமான இப்போட்டியில் ஹர்பஜன் சிங் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் டேவிட் ஹசி தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் ஹர்பஜன் சிங் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

சென்னை அணிக்கு எதிரான தொடக்க ஆட்டத்தில் காயம் அடைந்த சச்சின் டெண்டுல்கர் இப்போட்டியில் இடம்பெற்றார்.

ஆரம்ப வீரர்களாக சச்சின் டெண்டுல்கரும், ஜேம்ஸ் பிராங்ளினும் களம் இறங்கினார்கள். அணியின் ஓட்ட எண்ணிக்கை 51 ஆக இருந்த போது, சச்சின் டெண்டுல்கர் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ரோகித் சர்மா 2 ஓட்டங்களில் ஆட்டமிழக்க மும்பை அணி 9.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 56 ஓட்டங்களையே எடுத்திருந்தது.

அடுத்து 3-வது விக்கெட்டுக்காக பிராங்ளினுடன், தினேஸ் கார்த்திக் ஜோடி சேர்ந்தார்.

இந்த ஜோடி பஞ்சாப் அணியின் பந்து வீச்சை விளாசித் தள்ளியது. தினேஸ் கார்த்திக் அதிரடியாக விளையாடி 20 பந்துகளில் 35 ஓட்டங்களை எடுத்தார். பிராங்ளின் 79 ஓட்டங்களை எடுத்தார்.

இறுதியில் மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களை எடுத்தது.

பின்னர் 164 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பஞ்சாப் அணி 19.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இப்போட்டின் சிறப்பாட்டக்காரராக ஷோன் மார்ஷ் தெரிவானார்.

**இன்றைய ஐ.பி.எல். போட்டி:**
இரவு 8 மணிக்கு ஜெய்ப்பூரில் நடைபெறும் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்அணிகளும் மோதுகின்றன.

# சிறிலங்கா கிரிக்கெட்டின் ஒப்பந்தத்தை நிராகரித்தார் லசித் மலிங்க



இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க இலங்கை கிரிக்கெட் சபை வழங்கிய ஒப்பந்தத்தை ஏற்க மறுத்துள்ளார்.

மலிங்க தவிர, ஏனைய 92 வீரர்கள் கிரிக்கெட் சபையின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். இந்த 92 வீரர்களில் 22 வீரர்கள் தேசிய ஒப்பந்தத்திலும் ஏனையவர்கள் மாகாண மற்றும் ஏ அணிக்கான ஒப்பந்தத்திலும் இணைக்கப்பட்டுள்ளனர்.

வெளியாகியுள்ள தகவல்களின் அடிப்படையில் மலிங்கவிற்கு வருடமொன்றுக்கு ஒரு லட்சம் டொலர்கள் வழங்கப்படும் என்று உயர்நிலை ஒப்பந்தம் அளிக்கப்பட்டது.

எனினும் அவர் இலங்கை சார்பாக டெஸ்ட் போட்டிகளில் விளையாடாத நிலையில் அதன் 40 சதவீதத்தையே அவர் ஒப்பந்தமாக பெறுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் சபை வழங்கிய ஒப்பந்தத்தில் திருப்தியடையாத மலிங்க அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்துள்ளார்.

**இலங்கை திரும்பினார் மலிங்க**

தற்போது ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடிவரும் மலிங்க, காயம் காரணமாக இலங்கைக்கு திரும்பியுள்ளார். அவர் ஒப் பந்தத்தில் உள்ளடக்கப்படாத வீரர் என்ற போதிலும் அவருக்கான சிகிச்சைகளை இலங்கை கிரிக்கெட் சபை மேற்கொண்டு வருகின்றது.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க கூறுகையில்,, லசித் மலிங்கவிடம் தேசிய ஒப்பந்தம் இல்லாத போதிலும் இலங்கை சார்பாக தேசிய போட்டிகளில் விளையாடும் வீரர்களை பேணிப் பாதுகாப்பது இலங்கை கிரிக்கெட் சபையின் கடமை என்றார்.

இலங்கை சார்பாக ஒருநாள் சர்வதேசப் போட்டி மற்றும் இருபது-20 போட்டிகளில் மட்டும் பங்கேற்கும் மலிங்க, மும்பை இந்தியன்ஸ் அணிக்காக ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடுவதால் 11 லட்சம் டொலர்களை ஊதியமாகப் பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் மிக விரைவில் அவர் மும்பை அணியோடு திரும்ப இணைந்து கொள்ளுவார் என்று எதிர்பார்ப்பதாகவும் அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது

ஐ.பி.எல் தொடரில் இதுவரை அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவராக உள்ள மலிங்கவின் இழப்பு மும்பை இந்தியன்ஸ் அணியைப் பாதிக்கும் என்று கருதப் படுகிறது.

1 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



கனிஸ்டன் (அஜன்) நிலோபா உஷானி
தம்பதியரின் புதல்வி
அனுஷ்கா
அவர்கள் இன்று (23.04.2012)
தனது 1ஆவது பிறந்த நாளை
கொண்டாடுகிறார்.
குழந்தை யேசு அருள் பெற்று
பல்கலையும் கற்று பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.
பெற்றோர்,
பெரியம்மா குடும்பம் (France)
பெரிய மாமா குடும்பம் (Norway)
தாவீது பேரின்பநாதன்
இல. 53 (30), டேவிட் றோட்,
யாழ்ப்பாணம்.
(C-6430)

# ஹிலாரி–பீரிஸ் சந்திப்பு...

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான தங்கள் கட்சியின் நிலைப்பாடு குறித்த கருத்துக்களை இன்று எழுத்து மூலம் ஜனாதிபதியின் செயலகத்தில் கையளிக்கும்படி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 14 கட்சிகளின் தலைவர்களுடன் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கூட்டத்தின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் பணிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதன்போது வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸால் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பிலான தொகுக்கப்பட்ட அறிக்கையொன்று இக் கட்சிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் ஒரு நிகழ்ச்சிநிரல் ஒன்றையும் தயாரிக்கவுள்ளதாக அவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சிநிரலை தயாரிப்பதில் பாதுகாப்பு அமைச்சு, வெளிவிவகார அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் என்பன ஈடுபட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் 19-வது கூட்டத் தொடரில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒரு மாதத்தின் பின்னர் இலங்கை அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

அதேவேளை அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டனை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அடுத்த மாதம் 18-ம் திகதி சந்திக்கும்போது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான இந்த நிகழ்ச்சிநிரலும் கையளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்புக்காக வெளிவிவகார அமைச்சர் பீரிஸுடன் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் பணிகளைக் கண்காணிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகளும் வாஷிங்டனுக்குச் செல்லவுள்ளனர்.

இவர்கள் அடுத்த மாதம் 14-ம் திகதி வாஷிங்டனுக்கு விஜயம் செய்யவுள்ளதாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் றொபோர்ட் ஓ பிளேக்கை கடந்த திங்கட்கிழமை சந்தித்தபோது உறுதிப்படுத்தியுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது மற்றும் போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறுவது தொடர்பில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடந்த கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(எ-8)

## தம்புள்ளையிலுள்ள பள்...

சமய தலைவர்கள், சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா, பிரதியமைச்சர்கள், அப்துல்காதர், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா ஆகியோரும் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் மேலும் கருத்துத் தெரிவித்த பிரதமர் டி.எம்.ஜயரட்ன,

உலகின் அனைத்து முஸ்லிம் நாடுகளும் இலங்கையுடன் நட்புடன் உள்ள நிலையில் இத்தகைய சிறிய விடயங்களை அடிப்படை யாகக் கொண்டு, இனங்கள், மதங்களிடையே அநாவசிய மோதல்களை ஏற்படுத்துவதற்கு அனுமதிக்க முடியாது எனவும் பிரதமர் கூறியுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள் ளது.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா ஆகியோர் குறித்த பள்ளிவாசலுக்கு நேரடி விஜயம் மேற்கொண்டு விடயங்களை கேட்டறிந்து கொண்டனர்.

அத்துடன் காணி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் மற்றும் தம்புள்ள பிரதேச செயலாளர் ஆகியோரை அமைச்சர் ஹக்கீம் சந்தித்து இது தொடர்பில் பேச்சு நடத்தியுள்ளார். (எ-8)

## மூன்று...

டன் சந்தி, ஸ்ரான்லி வீதி, எரி பொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் நடைபெற்ற விபத்துக்கள் மதி மயக்கத்தினாலும் இடம்பெற்றுள்ளன.

இவ்விபத்துக்களில் தாளையடியைச்சேர்ந்த கபில்ராஜ் (வயது 22) என்பவரும் ஊர்காவற்றுறையினைச் சேர்ந்த ரஜீபன் எனப்படுபவரும் படுகாயமடைந்த நிலையிலும் முளவையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குருநகரில் நடந்த விபத்தில் எஸ்.யூலியஸ் (வயது 50) என்பவர் காயமடைந்தார். அண்மையில் சுண்டுக்குளி பகுதியில் இரு இளைஞர்களை காவுகொண்ட விபத்தைப் போன்றே இவ் விபத்துக்களும் இடம்பெற்றுள்ளன.

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்கள் மின்சார கம்பங்களோடு மோதுண்டனர். இவ் விபத்துக்கள் குறித்து பொலிஸார் முறைப்பாடுக்களை பதிவு செய்துள்ளனர். (எ-4,8)

## ஊடகவிய...

கைகள் எந்தளவு முக்கியமோ, அந்த அளவுக்கு இப்போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்களும் முக்கியமான பிரச்சினை. இது தொடர்பில் இலங்கை ஜனாதிபதியிடம் இந்தியக் குழு வலியுறுத்தியதா என ஊடகவியலாளர்கள கேள்வி எழுப்பினர்.

இது தொடர்பாக இந்தியக் குழுவில் இடம் பெற்றிருந்த தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சித்தன், சுதர்ஷன நாச்சியப்பன், மாணிக்தாகூர், கிருஸ்ணசுவாமி ஆகியோரிடம் ஊடகவியலாளர்கள் தொடர்ந்து கேள்விகளைக் கேட்டனர்.

ஆனால் ஊடகவியலாளர்களின் இக் கேள்விக்கு எவரும் நேரடியாகப் பதிலளிக்கவில்லை. இதனைத் தொடர்ந்து ஊடக வியலாளர்கள் மீண்டும் அதே கேள்வியை கேட்ட போது அவர்கள் இடைநடுவில் இந்த ஊடகவியலாளர் மாநாட்டை முடித்துக்கொண்டு சென்று விட்டதாக தெரிவிக்கப்பட்டது. (எ-8)

## இந்தியத் தூதரக...

விடயங்களை வலியுறுத்தினேன்.

முதலாவது அரசியல் தீர்வு, இரண்டாவது மனித உரிமைகள். இந்த இரண்டையுமே அவர் கவனத்தில் கொள்ளவில்லை என்றார் இரா.சம்பந்தன்.

இவர்கள் இருவரும் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த அமைச்சர் பசில் ராஜபக்ஷ, ரங்கராஜனைப் பார்த்து, விடுதலைப் புலிகளின் கொலைப் பட்டியலில் முதலாவதாக இருந்ததுயார் என்று உங்களுக்கு தெரியுமா? என்று கேட்டார்.

அவர்களின் கொலைப்பட்டியலில் முதலில் இருந்தது எனது சகோதரர் மகிந்த ராஜபக்ஷ தான். அதற்கடுத்தாக இருந்தது யார் தெரியுமா? அது சம்பந்தன் தான் என்றார்.

அதை நீங்கள் அறிவீர்களா? என்று இரா.சம்பந்தனைப் பார்த்துக் கேட்டார் பசில் ராஜபக்ஷ, அதற்கு அவர் தனக்குத் தெரியும் என்று பதிலளித்தார் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது. (எ-8)

## தமிழர்பகுதிகளில் தொடர்...

குணப்படுத்துவதற்காக சத்திரசிகிச்சை அளிக்கப்பட்டு பூரண குணமடைந்த நிலையில்,

இருதய சத்திரசிகிச்சைக்கு உதவியவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக நேற்று யாழ்.பாதுகாப்பு படைப்பிரிவின் பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் இராணுவ பிரசன்னம் அதிகரித்து வருகின்றது. இராணுவ ஆதிக்கம் தான் யாழ்.மாவட்டத்தில் உள்ளதுஎன பலர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். இராணுவம் யாழ்.மாவட்டத்தில் ஆதிக்கம் செலுத்தவில்லை என்பதை இந்த இடத்தில் நான் ஆணித்தரமாக கூற விரும்பு கின்றேன்.

நான் யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக பொறுப்பேற்ற போது 27 ஆயிரம் இராணுவத்தினர் இங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

ஆனால் தற்போது 16 ஆயிரம் இராணுவத்தினர் தான் இங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழர் பகுதியில் இருந்து இராணுவத்தினர் குறைக்கப்பட்டு வருகின்றனர் என்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டு. அத்தோடு யாழ்.மாவட்டத்திலிருந்து இன்னும் இராணுவத்தினர் குறைக்கப்படவுள்ளனர். நாம் ஆதிக்கம் செலுத்த நினைக்கவில்லை. மக்களுக்கு உதவி செய்யவே இங்குள்ளோம்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு உதவிகளைச் செய்து வருகின்றோம். வீடுகள் அமைத்துக் கொடுத்து வருகின்றோம். மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் புலமைப்பரிசில் வழங்கி வருகின்றோம். இன்னும் பல உதவிகளை வழங்க திட்டமிட்டுள்ளோம். உதவிகளை வழங்க நாம் தயாராக உள்ளோம். மக்களுக்கு உதவி செய்யவே இராணுவம் இங்கு நிலை கொண்டுள்ளது. மக்களுக்கு எதிராக செயற்படுவதற்கல்ல. இதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய ஞான தேசிக சுவாமிகள், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-6)

கிளிநொச்சியில்
இலவச அழகுக்கலை பயிற்சி

இலவச அழகுக்கலைப் பயிற்சியினால் பல அழகுக்கலை ஆலோசகர்களையும், சுயாதீன முகாமையாளர்களையும் உருவாக்கி வெற்றியடையச் செய்த சுவீடன் நாட்டு ஒறிபிளேம் (Oriflame) நிறுவனம் 590/- பதிவுக்கட்டணத்துடன் இலவச அழகுகலை பயிற்சியை ஆரம்பிக்கவுள்ளது. Facial, Gold Facial, Pedicure, Manicure, Threading, Hair style, Bridal Make-up.... என அனைத்து பயிற்சிகளும் செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும்.
வகுப்புகள் 29ஆம் திகதி 10 மணிக்கு ஆரம்பம்.
காலம் - 26.04.2012 நேரம் - 2.00pm
இடம் - கிளி/கனகபுரம் தமிழ் கலவன் பாடசாலை
தொடர்புகளுக்கு - 0772288243, 0772533507
(8220)

வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 1Kg க்கு UK 630/= Germany 730/= France 775/=
மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
யாழ்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் பொதிகள் உங்கள் வீட்டிற்கே வந்து ஏற்றுக்கொள்ளப்படும்.,(Door to Door Service)
24 மணி நேரத்தில் விநியோகிக்கும் சேவை. (TDD Service)
சகல நாடுகளிற்குமான விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்
Arrul Global Express
International Courier & Cargo Service
T.P : 021 222 6113
(C-6427)

ராசியான தங்க மாளிகைக்கு வாரீர் வாரீர்....
யாரேனும் சங்கானையில் நகை வாங்க வந்தால் பாரெங்கும் அவர்கள் நாவில் பேசப்படுவது
ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
நாளை செவ்வாய்க்கிழமை (24.04.2012) அன்று ராசியான அக்ஷய திருதியை முன்னிட்டு விஷேட கழிவுகளுடன் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்
மு.குறிப்பு:-தங்க நகை வாங்குபவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்படும்.
தங்க நகை ஓடர் தருபவர்களுக்கு தங்க நாணயம் பரிசில்களாக வழங்கப்படும்.
இல. 10, பஸ் நிலையம்,
சங்கானை .
தொ.பே:-021 3212399
(C-6428)



செல்வம் சேரும் பொன்னான நாளாம் அட்ஷய திருதியை இம்மாதம் 24 ஆம் திகதி(செவ்வாய்க்கிழமை) அன்றைய தினத்தில் உங்கள் இல்லத்துக்கு தங்கப் பவுண் ஒன்றை உங்கள் வசதிக்கேற்ப கொள்வனவு செய்து செல்வத்தை மென்மேலும் பெருக்கிக் கொள்ளுங்கள்.
உதயா ஜுவல்லர்ஸ்
Uthayaa Jewellerss
அன்றைய தினம் வருகை தரும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
அன்பளிப்பு பொருட்கள் வழங்கப்படும்.
இல 81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
No.81, Kasthuriar Road,
Jaffna
T.P:-021 222 4434
(அ-6420)



இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.